Registered as a NewsPaper பக்கங்கள் 08 விலை ரூபா...

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 02 (14-02-1992) வெள்ளிக்கிழமை ஓசை: 361

## வவுனியாத் தபால்கள் இராணுவத்தால் பிரிப்பு

வவுனியாவிற்கு வந்துசேரும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்கள் இராணுவத்தினரால் பிரிக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றன. வவுனியா பிரதம தபாலகத்திற்கு தினமும் வரும் இராணுவத்தினர், தபால் அதிகாரிகளுக்கு முன்னால் அமர்ந்து சந்தேகத்திற்கிடமான முகவரியில் உள்ள தபால்களைப் பிரித்துச் சோதனையிடுகின்றனர் பின்னர் தமக்குத் தேவையான கடிதங்களைக் கொண்டுசெல்லும் இராணுவத்தினர், தேவையற்ற கடிதங்களை உரிய (8ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாநாடுமீதான படையெடுப்பு பயங்கரவிளைவுகளைஏற்படுத்தும்

## பிரேமதாசாவுக்கு சுவீடன் பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாடுமீது படையெடுப்பு நடந்தால் பயங்கரமான எதிர்விளைவுகள் ஏற்படும் என்றும், அது ஒரு நீண்டகால கெரில்லா யுத்தத்திற்கு வழிவகுக்கும் என்றும் எச்சரித்து சுவீடன் நாட்டைச் சேர்ந்த பிரபல கல்விமானாகிய பேராசிரியர் பீட்டர் சோல்க் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

"யாழ்ப்பாணம் மீதான யுத்தம் அரசாங்கத்திற்கு பேரழிவை ஏற்படுத்தும். போர்த்திறன் மிக்க புலிகளுடன் மட்டுமன்றி புலிகளுக்கு ஆதரவாக அணிதிரண்டு நிற்கும் பொதுமக்களுக்கு எதிராகவும் சிங்கள இராணுவம் போராடவேண்டிவரும்" என்றும் பேராசிரியர் சோல்க் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் தொண்டமானின் முயற்சிக்கு கதவடைத்துவிடக்கூடாதென ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ள அவர், "சமாதானத்திற்கான இந்தக் கடைசி சந்தர்ப்பத்தை அரசாங்கம் நழுவவிடக்கூடாது" என கேட்டுக் கொண்டுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் அவர் குறிப்பிடுகையில் டிசம்பர் 1991இல் நான் யாழ்ப்பாணம் போயிருந்தேன் அங்கு பொதுமக்களிடையே விடுதலைப்புலிகளுக்குப் பேராதரவு இருப்பதை உணர்ந்து கொண்டேன் பொருளாதாரத்தடை நடவடிக்கைகளால் பொதுமக்கள் விடுதலைப்புலிகள்மீது கோபமடையக்கூடும் என்ற உங்கள் எதிர்பார்ப்புகள் பொய்த்துப்போயிருப்பதையும் புரிந்து கொண்டேன். பீரங்கிப் படகுகளாலும், எறிகணைத் தாக்குதல்களாலும், விமானத் தாக்குதல்களாலும் அதிகம் பாதிக்கப்படுவது பொதுமக்கள்தான். எனவே சமாதானத்திற்கான கடைசிச் சந்தர்ப்பத்தை இழந்து விடவேண்டாம். அவ்வாறு இழக்கப்படுமானால் நன்கு பயிற்றப்பட்ட விடுதலைப்புலிக [8 ஆம் பக்கம் பார்க்க]

# களம் பல கண்டவர்கள் போருக்கு அஞ்சார்கள்

## யாழ். மக்கள் குறித்து மகேந்திரராசா பெருமிதம்

(கொழும்பு)

களம் பலகண்டவர்கள் நாங்கள். நமது மக்களும் எதற்கும் பழக்கப்பட்டவர்கள். போர் ஒன்றுவந்தால் அவர்கள்அதற்குத் தாக்குப் பிடிக்கத் தயாராகி உள்ளனர். எனவே இராணுவ முற்றுகையையோ தாக்குதல்களையோ எம் மக்கள் தாக்குப்பிடிப்பார்கள். இதற்கான மன உறுதி அவர்களிடம் உண்டு இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்



தலைவர் கோ.மகேந்திரராசா தெரிவித்துள்ளார்.

வீரகேசரி பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டியொன்றில் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

''கண் மூடித்தனமானவிமானத் தாக்குதல்கள் நடைபெறுமானால் உயிர்ச் சேதங்களும், பொருட்சேதங்களுமே அபரிதமாகும். இதனைஎதிர்பார்த்து மக்களும் நாமும் தற்காப்பு நடவடிக்கையை செய்து வருகிறோம். நீங்களும் இதனைஅவதானித்திருப்பீர்கள் என்றும் அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

யாழ். குடாநாட்டுக்கு இராணுவத்தை அனுப்புவதற்குப் பதிலாக அரசாங்கம்நல்லெண்ணத் தூதுக் குழுக்களை அனுப்பி இங்குள்ள மக்களின் உள்ளங்களையும், உணர்வுகளையும் அறிய முற்படவேண்டும். [8 ஆம் பக்கம் பார்க்க]

## ஆசிரியர் சேவை முன் பயிற்சி

வடமராட்சியில் கொத்தணி ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட தற்காலிக ஆசிரியர்களுக்குரிய சேவை முன் பயிற்சி வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

இன்றும் நாளையும் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை யாழ். மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளது.

## மூன்றாவது தொகுதி புறப்பாடு

இலங்கைத் தமிழ் அகதிகள் 738 பேரைக்கொண்ட மூன்றாவது தொகுதி கப்பல்மூலம் திருக்கோணமலைக்குப் புறப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் 257 ஆண்கள், 264பெண்கள், 217குழந்தைகள் இடம்பெறுகின்றனர்.

## கடற்படை ரோந்து அதிகரிப்பு

வடமராட்சி கிழக்குக் கடலில் சிறிலங்கா விசைப்படகுகளின் ரோந்து இரவு நேரங்களில் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை (11-02-92) அதிகாலை கடலில் ரோந்து சென்று கொண்டிருந்த கடற்படையின்விசைப் படகு கடற் பிரதேசத்தில் துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்த வண்ணம் சென்றது. (36)

## கம்பன் விழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள கம்பன் விழாவை முன்னிட்டு கம்பன் கழகத்திலிருந்து பிற்பகல் நான்கு மணிக்கு ஊர்வலம் ஒன்று புறப்படவுள்ளது.

நாதஸ்வரக் கச்சேரி முழங்க அறிஞர்கள், கலைஞர்கள், கவி [8 ஆம் பக்கம் பார்க்க]

### நோயாளர்களை பார்வையிட

## ஆஸ்பத்திரி வருவோருக்கு சில அறிவுறுத்தல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், நோயாளிகளைப். பார்வையிடுவோருக்கு சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

(1) வைத்தியசாலையில் தேவையற்ற பொருள்கள் கொண்டு வருவதை தவிர்க்கவும்.

(2) வைத்தியசாலை கிளினிக்குகளுக்கு செல்வோர் உடன் தமது தேவையைப் பூர்த்தி செய்தவுடன் வைத்தியசாலையை விட்டு வெளியேறவும். [8 ஆம் பக்கம் பார்க்க]

### சர்வதேச செஞ்சிலுவைச்சங்க

## அதிகாரி கிளாவ்டியோ கொழும்பு திரும்புகிறார்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் தலைவர் கிளாவ்டியோ இம்மாத இறுதியில் கொழும்பு திரும்புகின்றார். இவருக்குப் பதிலாக நேற்று வந்துள்ள புதிய பிரதிநிதி சார்வேர்ஸ் கடமையாற்றுவர்.

மேலும்இங்குள்ளதொலைத் தொடர்பு சாதனங்களை பழுது பார்ப்பதற்கு ''வோர்ச்ஸ்'' என்ற பிரதிநிதி ஒருவரும் வந்துள்ளார். இவர்களுடன் மாக்ஸ் என்ற கப்பல்பிரதிநிதியும் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (75)

# திருமலையில் 7 தமிழர் சுட்டுக்கொலை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் மூன்று நாட்களில் நடைபெற்ற வெவ்வேறு சம்பவங்களில் மொத்தம் ஏழு அப்பாவித் தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இருவர் கால்களை இழந்தனர். பலர் காயமடைந்தனர்.

பாட்டாளிபுரத்தில் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## எல்லை கடக்கும் தீர்மானம் கைவிடப்பட்டது

### அமானுல்லா கான் அறிவிப்பு

இந்திய ஜம்மு-காஷ்மீர் கட்டுப்பாட்டு எல்லையைக் கடப்பதென்ற தமது தீர்மானத்தைக் கைவிட்டுள்ளதாக ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி தலைவர் அமானுல்லா கான் அறிவித்துள்ளார்.

எல்லைக்கோட்டைத் தாண்டுவதற்கு ஊர்வலமாக சென்றவர்களை சுடும்படி பாகிஸ்தான்இராணுவத்திற்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் ஏற்கனவே 10 தொண்டர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## அமானுல்லாகான் விடுதலை

(இஸ்லாமாபாத்)

இந்திய ஜம்மு-காஷ்மீர் எல்லையைக் கடக்கும் பேரணித் தலைவர் அமானுல்லாகான் விடுதலை செய்யபபட்டார்.

பாகிஸ்தான் இராணுவத் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கம்பியூட்டர் கல்வி

Computer Basic. புதிய பிரிவு 17-02-92 லண்டன் I.D.P.M அங்கத்துவ விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது. Practicals Generator Current மூலம் பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ். School of Business Administration 16, 3 rd Cross Street, Jaffna (சி 3912)

### ஆங்கிலப்பயிற்சி

ENGLISH GRAMMAR அங்கில இலக்கணம் AND SPOKEN ENGLISH ஆங்கிலத்தில் பேசும் முறை 3 மாதப்பயிற்சி அளிக்கப்படுகிறது. V.N KANDASAMY A I B PART I (LONDON) INTER (LONDON) 87, கொக்குவில் — திருநெல்வேலி றோட், கொக்குவில். (2205)

### தவறிவிட்டது

Seiko 5 ரக மணிக்கூடு 12/02 அன்று வவுனியாவுக்கும் பளைக்குமிடையே தவறிவிட்டது. ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2207)

## விவசாய அபிவிருத்தி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவனத்துடன் இணைந்து விவசாய அபிவிருத்திக்கருத்தரங்கு ஒன்றை நடாத்தவுள்ளது.

மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் நாளை சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு நடைபெறும். மேற்படி கருத்தரங்கில் ஆர்வலர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இணைச்செயலாளர்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## விஜய குமாரணதுங்கா ஞாபகார்த்த முத்திரை

(கொழும்பு)

சுட்டுக்கொல்லப்பட்ட அரசியல் வாதியும், நடிகருமான விஜய குமாரணதுங்காவைக் கௌரவிக்குமுகமாக ஞாபகார்த்த முத்திரையொன்றை வெளியிட சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இணக்கம் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கடந்த செவ்வாய்க்கிழமை விஜயகுமாரணதுங்காவின் தாயாரைஅவரதுஇல்லத்திற்கு சென்று சந்தித்தபோது அவர் விடுத்த வேண்டுகோளைஏற்று இதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

## மாணவர்கள் சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கொத்தணிப் பாடசாலை மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகள் இன்று காலை 8 30 மணிமுதல் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் (நூலகம் முன்பாக) ஆரம்பமாகவுள்ளது.

கல்விப்பொதுத்தராதர உயர்தர வகுப்பு 92. 93. 94. ஆம் ஆண்டு மாணவர்கள் அனைவரையும் மேற்படி பாடசாலைக்கு உடனடியாக சமுகமளிக்குமாறு கொத்தணி அதிபர் செ.தேவதாசன் கேட்டுள்ளார். (ச)

### பறலல்

நான் பார்த்துக்கொண்டு நிற்கிறேன்.

சமாந்தரமாய் போய்க்கொண்டிருந்த சிலரை விலத்தி முன்னுக்குப் போக முயன்ற மற்றுமொரு சைக்கிள்காரர், மின்கம்பம் ஒன்றுடன் மோதுண்டதால் ஸ்தலத்திலேயே பலியானார் என்றஒரு செய்திக் குறிப்பு என் மேசைக்கு வந்திருந்தது.

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்

## அபாயக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அபாயக் கொடுப்பனவை பெற்றுக் கொடுக்க நிர்வாகம் பின்னடைவு காட்டி வருகின்றது.

வடமராட்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஒன்றியத்திற்குள் அமைந்துள்ள மற்றைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இக் கொடுப்பனவை பெற்றிருந்தும் மேற்படி சங்கத்திற்கு இக் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்க ஒன்றியமோ, இச்சங்கநிர்வாகமோ இதுவரை முன்வரவில்லை.

இச்சங்க ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் பல மாதங்களாக கச்சேரிக்கு வந்திருந்தும் கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லையேயென ஊழியர்கள் ஏங்குகின்றனர். (82)

நல்லெண்ண விஜயமாக

## அமெரிக்ககடற் படைதளபதி இலங்கை வருகின்றார்

(கொழும்பு)

இலங்கைக்கு நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டுஅமெரிக்காவின் ஏழாவதுகடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ஸ்டான்லி ஆர். ஆர்தர் கொழும்பு வந்துள்ளார்.

இவர் நேற்று முன்தினம் பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி.பி விஜயதுங்காவை பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் சந்தித்துப் பேச்சுக்களைநடத்தினார். அமெரிக்க அதிகாரி ஸ்டான்லி ஆர் ஆர்தர் பாதுகாப்பு படையின் அதி உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருப்பதாக தெரியவருகின்றது கடல் பிராந்திய விவகாரங்கள் குறித்து இவர் பேச்சுக்களை நடத்தியிருப்பதாகத் தெரிய வருகின்றது.

காவிரி நீர்ப்பிரச்சினை

## தமிழக நிலையை ஆராய அனைத்துக் கட்சிக் கூட்டம்

(சென்னை)

காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழகம் கடைப் பிடிக்க வேண்டிய நிலை தொடர்பாக ஆராய அனைத்துக் கட்சிக் கூட்டமொன்று கூட்டப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமையன்று சென்னையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. வரும் திங்கட்கிழமையன்று புதுடில்லியில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும், கர்நாடக முதல்வர்பங்காரப்பாவிற்கும் இடையே பிரதமர் பி. வீ. நரசிம்மராவ் முன்னிலையில் நடைபெற ஏற்பாடாகியுள்ள பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக இக் கூட்டம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

காவிரி நதி நீர்ப்பங்கீடு தமிழக - கர்நாடக மாநிலங்களுக்கிடையே பிணக்கு எழுந்து நடுவர் மன்றம்வரை சென்றதும் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை கர்நாடக மாநிலம் அமுல் படுத்த மறுத்ததும், கர்நாடகத்தில் தமிழக மக்களுக்கு எதிரான வன்செயல் சம்பவங்கள் இடம் பெற்றதும் தெரிந்ததே-

### கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மைக்கல் தவராசா (ஐந்து வீட்டுத் திட்டம், நாவற்குளி) என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப் பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் இதனைப்பெற்றுக் கொள்ளவும்.

## நல்லூர் பிரதேச சபையின் சுகாதார வாரம்

நல்லூர் பிரதேச சபையின் சுகாதாரவாரம் எதிர் வரும் பதினேழாம் திகதி முதல் இருபத்துமூன்றாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இச்சுகாதாரவாரம் எதிர் வரும்17ஆம் திகதி காலை 8மணிக்குகொக்குவில் சந்தியில் நல்லூர்பிரதேச சபை விசேட ஆணையாளரினால் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

போதிய மருத்துவ வசதியின்மை, மருந்துத்தட்டுப்பாடு நிலவுகின்ற இன்றைய சூழ்நிலைகளில் சுகாதாரத்தைப் பேணி தொற்று நோய்களைத் தடுப்பதன் அவசியத்தை மக்களிடையே வலியுறுத்துவதே இதன் நோக்கமாகும். இச்சுகாதார வாரத்தில் நல்லூர் பிரதேச எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் கிராம, மகளிர் அபிவிருத்திச் சங்கங்கள், சுகாதாரக்குழுக்கள், ஆலயபரிபாலன சபைகள், பொதுமக்கள் ஆகியோரை பொது இடங்கள், வீதிகள், மயானங்கள், வாய்க்கால்கள், தனிப்பட்ட காணிகள் ஆகியவற்றைத் துப்புரவு செய்யுமாறும் வீடு வீடாகச் சென்று சுகாதார அறிவுரைகளை வழங்குமாறும் கிணறுகளுக்கு குளோரின் போடுமாறும் நல்லூர் பிரதேசசபை விசேட ஆணையாளர் கேட்டுள்ளார்.

இப்பணிகளில் சுகாதாரப் பரிசோதகர்கள் கிராம அலுவலர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரதேச சபை ஊழியர்கள் ஆகியோர் ஈடுபடவுள்ளனர்.

## காணவில்லை

மன்னாரைச் சொந்த இடமாகக் கொண்ட குமார்/வதனன் (வயது 13-14) வெள்ளை நிறம், பெண்களுக்கான பச்சைநிற லுமாலா துவிச்சக்கரவண்டியுடனும் பணத்துடனும் 10-02-92 முதல் காணாமல் போய் விட்டார் கடைசியாகக் காணும்போது இவர் மேகநீல செக்சேட்டும் சாம்பல்நிற நீளக்காற்சட்டையும் அணிந்திருந்தார். இவரைக்கண்டவர்கள் யாழ். பழைய புத்தகக்கடை, 32 அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நேரடியாகவோ, கடித மூலமோ, அல்லது அருகில் உள்ள காவல்துறை அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (சி/3923)

## வடமராட்சி கோட்டத்தில் 180 தற்காலிக ஆசிரியர்கள்

வடமராட்சி கல்விக் கோட்டத்தில் 180 தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் பெறவுள்ளார்கள்.

வடமராட்சியிலுள்ள எட்டு கொத்தணியிலும் சுமார் 81 பாடசாலைகள் உள்ளன.

இப் பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஏற்ப இந்த தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் பெறுவார்கள். (36)

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி

யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனத்துடன் இணைந்து நடாத்தும்

## விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கு

இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவனம், மருதனார்மடம்.

காலம் : 15-02-1992 சனிக்கிழமை காலை 8 30 மணி

### இன்றைய சூழ்நிலையில் யாழ்.மாவட்டத்தில் ஒன்றிணைந்த விவசாயம்

பங்குகொள்வோர் :

(அ) திரு. எஸ். இராஜதுரை அவர்கள் (பயிரியல் துறை - விவசாயபீடம்)

(ஆ) திரு. கே. குணரத்தினம் அவர்கள் (உதவிப் பணிப்பாளர் - விவசாய திணைக்களம்)

(இ) வைத்திய கலாநிதி திருமதி எஸ் தனபாலசிங்கம் அவர்கள் (அரச கால்நடை வைத்தியர், தெல்லிப்பளை)

(ஈ) திரு. பொ. இரவீந்திரன் அவர்கள் (விரிவுரையாளர் - யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில்நுட்ப நிறுவனம்

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குரும்பசிட்டி, தெல்லிப்பளை. (2206)

க. விஸ்வநாதன்
பிரசார செயலாளர்

## நினைவு கூருகின்றோம்

## 1992 - 02 - 14

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி கரடிப்போக்கில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வாகன சாரதியான பொதுமகன்

1987ஆம் ஆண்டு கைதடியில் எதிர்பாராத வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த

**லெப். கேணல் பொன்னம்மான்/அற்புதன்** [யோகரத்தினம் குகன் - கலட்டி, யாழ்ப்பாணம்]

**மேஜர் கேடில்ஸ்** [மகாலிங்கம் திலீபன் - கண்டாவளை]

**கப்டன் வாசு** [உருத்திராபதி சுதாகர் - வல்வெட்டித்துறை]

**லெப். சித்தார்த்தன்** [வைத்திலிங்கம் வசீகரன் - 20, சுவாட்ஸ்வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்]

**2ஆம் லெப். பரன்** [கிருட்ணர், அருச்சுனன் - வல்வெட்டித்துறை]

**யோகேஸ்** [சுந்தரம் தனபாலசிங்கம் - ஆழியவளை, தாழையடி]

**தேவர்** [தம்பிப்பிள்ளை வசந்தகுமார் - மீசாலை]

**குமணன்** [கந்தையா மோகனலிங்கம் - மட்டுவில்]

**அக்பர்** [அருளம்பலம் யோகநாதன் - மட்டுவில் தெற்கு]

**கவர்** [கதிர்காமு நகுலேஸ்வரன் - வவுனியா]

இச்சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்கள்

கிரானில் சிறிலங்காப்படையினரின் சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய

**துரை** [அழகிப்போடி மயில்வாகனம் - கிரான் மட்டக்களப்பு]

இலைக்கந்தையில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய

★ **பறக்கும் புறா** [சிவஞானசுந்தரம் - சேனையூர் மூதூர்]

1988ஆம் ஆண்டு பூநகரி - வெட்டுக்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**தர்மேந்திரா** [இராசதுரை றொபேட் கெனடி - இல. 68, டேவிற் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்]

1989ஆம் ஆண்டு குமிழமுனையில் இந்தியப்படையின் காவலரண் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**கப்டன் மோகன்** [சிவகுரு குணலிங்கம் - 7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு]

1991ஆம் ஆண்டு மணற்பிட்டியில் சிறிலங்காப்படை முகாம் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**லெப். தயானி** [தாமோதரம்பிள்ளை கிருபானந்தலிங்கம்-ஆரையம்பதி, மட்டக்களப்பு]

**முகேஷ்** [சித்தாண்டி, மட்டக்களப்பு]

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(சி-3921)

நல்லூர் ... யாழ்ப்பாணம்




அன்பின் புலேந்திரன்,

இன்றைய நாளில் தஞ்சம் என்று சென்ற மக்களைக் கழுத்தைப் பிடித்து வெளியேற்றுகின்றது இந்திய அரசு. பருந்தின் பாதுகாப்பில் கோழிக்குஞ்சுகளை ஒப்படைக்கின்றது. 1958, 1977, 1983 கலவரங்களின் போது உங்களது சொந்த நாடு தமிழீழம் தான் என்று கப்பலில் அனுப்பியது சிறீலங்கா. அதையே தான் 1992இல் இந்தியா செய்கின்றது. ஆனால், அனுப்பப்படும் மக்கள பணயக் கைதிகள் என்ற நிலையில் வருகிறார்கள். இந்திய தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பான இடமல்ல என்ற செய்தி உணர்த்தப்படும் போது. இந்திய இராணுவத்திலுள்ள மேஜர் கருப்பசாமி உனக்குச் சொன்ன ''இன்றும் இல்லை; இனி எப்போதும் இல்லை'' என்ற வாக்கியமே நினைவுக்கு வருகிறது.

தமிழ் மக்களின் பாதுகாப்புக்குத் தானே உத்தரவாதம் ஏற்று எமது ஆயுதங்களைப் பெற்ற இந்தியா, நீ திருமலைக்குப் போவதற்குப் பாதுகாப்புக் கேட்டபோது இப்படிப் பதிலளித்தது. விடுதலைக்காகப் போரிடும் ஓரினம் தன்னைத் தானே நம்பியிருக்க வேண்டும் என்ற உண்மையைக் கருப்பசாமி வாயிலாக அன்று இந்தியா உணர்த்தியது. பின்னர், அதே செய்தி உனது மரணம் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

உனது மரணம் தமிழீழத்தையே உலுக்கியது. மாபெரும் வரலாற்றுத் துரோகமல்லவா அது? தமிழீழ வரலாற்றில் உனது பெயர் அழியா இடத்தைப் பெற்றதல்லவா? முதன் முதல் சிறீலங்கா இராணுவத்தினர்க்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் (1981 இல் காங்கேசன்துறை வீதிச் சம்பவம்) பங்கு பற்றியவர்களில் சீலன், ரஞ்சன் ஆகியோர் வீரச்சாவெய்திய பின் நீ தானே எஞ்சியிருந்தாய், கடைசியில் நம்பிக்கைத் துரோகத்துக்கல்லவா நீ பலியாகியிருக்கிறாய். தமிழீழ விடுதலைப் போரின் பல வரலாற்றுப் பதிவுகள் உனது வீரச்சாவினால் ஸ்தம்பிதமாகி விட்டனவே.

நான் இந்தியப் படைகளின் சிறையில் இருந்த காலத்தில் எனது மனைவி எனது மகளின் நிலையைப் பற்றி ஒரு செய்தி சொன்னாள். வீதியில் தமது தகப்பனுடன் செல்லும் குழந்தைகளை எனது மகள் வெறித்தபடியே பார்ப்பாளாம். தனது பார்வையிலிருந்து அவர்கள மறையும் வரை வேறெதையும் பார்க்க மாட்டாளாம்—பேசமாட்டாளாம், இச்செய்தியைக் கேட்டதும், தந்தை அருகிலில்லாதது ஒரு குழந்தைக்கு எப்படியான ஏக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உணர முடிந்தது. கூடவே உனது ஞாபகம் என்னை வட்டியது. எனது மகள்என்றோ ஒருநாள் தனது தந்தையைக் கண்டவள். இனிமேலும் அவளுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கலாம். ஆனால் உனது மகன்? பிறக்கும் போதே, ''இன்றும் இல்லை; இனி எப்போதும் இல்லை'' என்ற நிலையல்லவா? ஓ.. எவ்வளவு விலை கொடுத்திருக்கிறோம் எமது தாயக விடுதலைக்கு. கூடவே எம் இதயத்தின் சக்தியையும் கணக்கிட்டுக் கொள்கின்றேன், இதையெல்லாம் தாங்கும் வலிமையை எப்படிப் பெற்றுக் கொண்டோமென்று.

இயக்க ரீதியாக என்பதை விட—தனிப்பட்ட முறையிலும் எமது கிராமத்து மக்களின் இதயத்தைப் பொறுத்தவரை நீ அவர்களது தத்துப் பிள்ளை. பாடசாலை மாணவர்கள் என்ற போர்வையில் பொட்டுவின் வீட்டில் வாடகைக்குக் குடியிருந்த அந்த நாட்களை நினைத்துக் கொள்கிறேன். மீள வருமா அந்த நாட்கள்? ''புலேந்திரன்—புலேந்திரன்'' என்று உருகி வழிந்தார்களே எனது கிராம மக்கள்! எங்கள் எல்லோருக்கிடையில் உன்னிடம் மட்டும் அப்படியென்ன சக்தியிருந்தது? விசேஷமான கறிகள் சமைத்தாலோ, கோயில் விசேஷங்களின் பிரசாதங்களென்றாலோ உனது பெயரைச் சொல்லி விசாரித்துக் கொண்டு வந்து ஒரு பங்கைத் தருவார்களே, அது ஏன்?

அந்தக் காலத்தில் எனது கிராமத்தில் நடந்த மரண ஊர்வலங்களில் பிரேதத்தைச் சுமக்கும் தோள்களில் ஒன்று உன்னுடையது. மங்கள காரியங்கள் நடைபெறும் வீடுகளில் அலங்கார வேலைகளுக்கிடையே உனது குரல் தனித்துக் கேட்கும். குடும்பத்தில் முரண்டு பிடிக்கும் இளைஞர்களுக்கெல்லாம் உனது வார்த்தைகள் நாணயக் கயிறு, மாலை நேரத்தில் சனசமூக நிலைய மைதானத்தில் நீதான் உதைபந்தாட்டப் பயிற்சியாளன். அயலிலுள்ள மாணவர்களுக்கு இலவசக் கல்வி போதனையாளன். இன்னும் இன்னும் எத்தனை எத்தனை? .. இந்தச் சம்பவங்களையெல்லாம் எனது கிராம மக்கள் ஞாபகப்படுத்திச் சொல்கையில் அவர்களது கண்கள் கலங்கும்; தொண்டை அடைத்துக் கொள்ளும்; மீண்டும் பிறந்து வரமாட்டாயா? என்ற ஏக்கம் பிறக்கும்.

''சுப்பர் சோனிக்'' — அது தான் நாங்கள் உனக்கு இட்ட பட்டப் பெயர். எங்கும் எதிலும் வேகம் காட்டும் உனது போக்கு — மிதிவண்டி தொடங்கி எந்த வாகனத்திலும் உன்னுடன் நாம் வரப் பயப்படுவது உனது வேகத்தைப் பார்த்துத்தான். எங்கே போய் அடிபட்டாலும் இறுதியில் நொண்டுவதும் நாங்கள் தான். நீ சிரித்தபடியே எழும்பி வருவாய் அப்படியான சந்தர்ப்பங்களில் ஒரு போதுமே நீ உனது தவறை ஒத்துக் கொள்வதில்லை 'நானென்ன செய்யிறது? திடீரெண்டு வந்திட்டான் — திடீரெண்டு வளைவு வந்திச்சுது' என்றெல்லாம் நீ சொல்லும் போது நாங்கள் வலியை மறந்து சிரிப்போம். பயிற்சியின் போது ஒழுங்காகச் செய்யாததற்காக நாங்கள் தண்டனை பெறும் போது நீ மேலதிகமாகச் செய்ததற்காகத் தண்டனை பெறுவாய். அந்தக் கடுமையான பயிற்சி முடிந்ததும் நாங்கள் தரையில் கிடந்து தத்தளிக்கும் போது நீயோ சிரித்தபடியே துள்ளித் திரிவாய் மீண்டும் வருமா அந்த நாட்கள்?


நாங்கள் செம்மணியிலிருந்து கொடிகாமம் வரை ஓடிப் பயிற்சியெடுப்பது-எதுக்கு ஓடுகிறோம் என்று தெரியாமல் எமது கிராமத்து இளைஞர்கள் 'நாங்களும் வாறம்' எனத் துணைக்கு ஓடி வருவது எந்த இடத்து றேசுக்கு ஓடிப் பழகுறீங்கள்?' என்று சாவகச்சேரி காவல் நிலையக் காவலர்கள் கேட்பது - இவற்றில் நான் எதை நினைப்பது? எதை மறப்பது அன்றஎமது வியர்வையை தாங்கிக் கொண்ட அந்த வீதி அந்த வீதியால் செல்லும் போது உதிரும் கண்ணீரையும் ஏற்றுக்கொள்கிறது. உனது மகன் வளரட்டும் இந்தப் பாதையெல்லாம் கூட்டிச் சென்று 'இதால தான்டா கொப்பரும் நாங்களும் ஓடிப் பழகினது' என்று காட்டுகிறேன்.

புலேந்திரன் நீ நடத்திய தாக்குதல்கள் ஒவ்வொன்றுமே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. சிறிலங்காவின் சகல படைகளுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தியிருக்கிறாய். குடியேற்றம் மூலம் எமது பாரம்பரியப் பிரதேசங்களைக் கபளீகரம் செய்ய முனைந்த சிங்களப் பேரினவாதிகளுக்கு நீ சிம்ம சொப்பனமாகத் திரிந்தாய். அதனால் தான் உன்னைப்பணயமாக வைத்து தமது சிப்பாய்களைக் கேட்க முனைந்தது சிறிலங்கா அரசு. மணமாகி மூன்று மாதங்கள் - உனது வாரிசைச் சுமக்கும் உனது மனைவி - இந்த நிலையிலும் நீ அடிபணிய மறுத்தாய். சிறிலங்கா இராணுவத்தினர் யுத்த காலத்தில் கைது செய்யப்பட்டவர்கள். நாம் சமாதான காலத்தில் கைது செய்யப்பட்டவர்கள்' என்றாய். முடிவில் சயனைட் உட்கொண்ட நிலையிலும் கைகள் கால்கள். பற்களால் யுத்தம் நிகழ்த்தினாய்.

உனது உடலில் தெரிந்த காயங்கள் சிங்களப்படை உன் மீது எவ்வளவு ஆத்திரம் கொண்டிருந்தது என்பதைப் புலப்படுத்தின. உனது புகழுடலைப் பொறுப்பேற்றபோது, அதில் இருந்த காயங்களைக் காட்டி, இதைப்போலரெண்டாயிரம் பெட்டி (BODY) தரத்தயாராயிருக்கிறம்' என்று சொன்னார் மாத்தயா. ஆனால் அதற்கு மேற்பட்ட தொகையைக்கொண்ட சிப்பாய்களின் சடலங்களைச் சுமந்து சென்றன இந்திய விமானப்படை விமானங்கள்.

'இந்தியா எமக்குச் செய்த பாவத்தைக் கழுவ புனித கங்கை நீர் போதாது' என்று ஒரு வரலாற்றறிஞர் குறிப்பிட்டதை நினைவு கூருகின்றேன். திலீபனின் மரணம், உனது மரணம், எமது மக்களுக்கெதிரான போர் இவற்றைக் குறித்தே அவர் அவ்வாறு கூறினார். அத்துடன் இப்போது மேலதிகமாக அகதிகளைச் சிங்கள இராணுவத்திடம் ஒப்படைக்கும் பாவத்தைச் செய்கிறது. இந்தப் பாவத்தைக் கழுவ வேறு நாடுகளிடம்தான் தண்ணீருக்கும் கடன் வாங்க வேண்டும் இந்தியா.

• கரும்பறவை



லெப்ரினன்ட் கேர்ணல்
புலேந்திரன்

## பனிப் படலங்களில் சிற்பங்கள்

சிற்பக் கலையில் தேர்ச்சி அடைந்தோர் கருங்கற் பாறைகளைக் குடைந்து அழகிய சிற்பங்கள், கலை வடிவங்கள் என்பனவற்றை உருவாக்குகின்றனர். ஆனால் மனித நடமாட்டமில்லாத அத்திலாந்திக் சமுத்திரத்தின் அன்டாட்டிக் தீவுகளின் கரையோரங்களில் பனிப்பாறைகளிலும் அழகிய உருவங்கள் குடையப்பட்டிருப்பதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்

பனிபபடலங்களில் இராட்சதஉருவிலான கோல்பின்மீன்கள், வாத்துக்கள், சிங்கம் கரடி போன்ற உருவங்கள் மிகவும் அழகாகக் குடையப்பட்டுள்ளதை அடிக்கடி அவதானிக்க முடிகின்றது அத்துடன் அவற்றை இவ்வளவு நேர்த்தியாக யார் அமைக்கின்றனர்? என்பதும் புரியாத புதிராகும்.

பனிப்பாறைகள் ஏறத்தாழ ஆயிரம் தொன் நிறைக்குமேற்பட்டதாகும் அத்துடன் அவை மனிதனின் கரங்களால் நிச்சயமாகஅமைக்கப்பட்டதல்லஎன சமுத்திர நீர் நிலை ஆராய்ச்சியாளர் டாக்டர் ஜாரெலீபெற்றஸன் தெரிவித்துள்ளார். இவரது ஆய்வில் பல பனிப்பாறைகள் ஆதாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப்பனிப்பாறை உருவங்கள் அறுபது முதல் நூற்றிஐம்பது அடி உயரமானவையாகும் கடந்த ஆகஸ்டு மாதம் பனிப்பாறையில் குடைந்தஇருஉருவங்களின் முகத்தில் கண்கள் மூக்குமற்றும் வாய்தாடைகள் யாவும் மிகவும் நுணுக்கமாகக் குடைந்துள்ளதையும் அந்த ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ளார்.

அத்திலாந்திக் சமுத்திரத்தில் பயணம் செய்யும் கப்பல்களில் கடமை புரிந்தவர்கள் தமது நேரடியான பார்வையில் கண்ட அனுபவங்களைத் தெரிவித்துள்ளனர் என்றும் டாக்டர் ஜாரெலீ பெற்றஸன் தெரிவித்துள்ளார். இவ்வாறாக இவர் 356 கப்பலோட்டிகளைச் சந்தித்து அனுபவ ரீதியான அறிக்கைகளை பெற்றுக் கொண்டுள்ளார்.

பனிப்பாறையில் குடைந்த உருவங்கள் மெல்லிய சூரிய ஒளியில் வானவில்லின் வர்ணங்களையும் பிரதிபலிக்கின்றன என்றும்-

இளவேனிற் காலங்களில்இந்தப் பனிப்பாறை வடிவங்கள் குறித்து மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ள இருப்பதாகவும் இதற்கென மேலதிக தகவல்களை தாம் சேகரிப்பதாகவும் அந்த ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார்.

தொகுப்பு- வீரகேசரி

## சுதந்திரம்

★ மானத்திற்காக அனைத்தையும் பணயம் வைக்கும் வீர, தியாக உணர்வு கொண்டவர்களால் தான் சுதந்திரத்தை எப்பொழுதும் போராடிப் பெற முடியும்.

★ சுதந்திரம் நிலைப்பதையும் வெற்றி பெறுவதையும் உறுதிப்படுத்தநாங்கள்எந்தவிலையையும்கொடுப்போம். எந்தச் சுமையையும் தாங்குவோம். எந்த இன்னலையும் எதிர் கொள்வோம். எந்த நண்பரையும் ஆதரிப்போம். எந்தப் பகைவனையும் எதிர்ப்போம் என்பதை நம் நலனை நாடும் நாடுகளும் சரி நமக்கு தீங்கு நினைக்கும் நாடுகளும் சரி அறிந்து கொள்ளட்டும்.

## முதலாவது வர்ண நிகழ்ச்சி கண்டு பிடித்தவரின் மரணச்சடங்கு

தொலைகாட்சிப் பெட்டி 1925 இல் ஜோண் லொஹிபாட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. மிகவும் வறியவராக இருந்த இவர் அரசின் உதவியுடன் ஆராய்ச்சிகளைச் செய்து தொலைக்காட்சிப் பெட்டியைக் கண்டு பிடித்தார்.

அவர் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைக் கண்டுபிடித்த பின் முதன்முதலாக முதலாம் உலக யுத்தத்தின் பின் நடைபெற்ற விக்ரோறியா அணிவகுப்பு நிகழ்ச்சியை ஒளிபரப்ப எண்ணினார்.

ஆனால், அணிவகுப்பிலன்று அவர் மரணம் அடைந்து விட்டார். இதனால் இவரது மரணச் சடங்குகளே முதன் முதலில் வர்ணத் தொலைக்காட்சி நிகழ்ச்சியாக மாறியது.

# பரபரப்பு

சிறுகதை

ந. கிருஷ்ணசிங்கம்

டாக்டர் இந்திரன் தனது மனதை எவ்வளவு கட்டுப்படுத்தியும் அந்த பிரான்ஸ் டாக்டர் போல் பிறியிட்டியிடமிருந்து விலகி நடக்க முடியவில்லை! அவன் தனக்குள் கட்டிய அணைகளை எல்லாம் உடைத்துக் கொண்டு, அவனின் ஆத்மா அவளை நாடி கரை புரண்ட காதலோடு, மடை திறந்து பாயத் தொடங்கியது.

அவனின் தாய் தந்தை சகோதரிகள் இந்தக் காதலை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது அவனுக்குத் திட்டவட்டமாகத் தெரியும். ஊரில் இருக்கும் மாப்பிளைத் தட்டுப்பாட்டில் பல இலட்சம் பெறுமதி வாய்ந்த தங்கள் டாக்டர் மாப்பிளையை ஒரு வெள்ளைக்காரிக்கு விட்டுக் கொடுக்க எந்தப் பெற்றோர்தான் விரும்புவார்கள்.

''கலோ இந்..'' என்று அவனைத் தழுவிப் பிரிந்த பிறியிட், அவனின் முன் இருந்த கதிரையில் அமர்ந்து உல்லாசமாகச் சிரித்தாள். வெள்ளை வெளீரென்ற அந்த முத்துப் போன்ற பற்கள் சிறிய உதடுகளைப் பிரித்துப் புன்னகைத்தது. கரிய கூந்தல் — கருமை நிற புருவங்கள்; ஒளி உமிழும் கரு நீலக்கண்கள் — எடுப்பான மூக்கு இவையெல்லாம் அந்த ஐந்தரை அடி உயர அளவான உடலுக்கு அலாதியான அமைதிக்கவர்ச்சியைக் கொடுக்கும்

வைத்தவிழி வாங்காது இந்திரன அவளின் எளிமையான அழகை — இனிமையான பிரான்ஸ் வாடை வீசும் ஆங்கிலத்தை இரசித்தபடி இருப்பான்.

தொலைபேசி அழைக்கவே அவனைத் தோளிலே தட்டிவிட்டு எழுந்து தனது குறுகுறு நடையுடன் பிறியிட் சென்று மறைந்தாள்.

நீண்ட பெருமூச்சு அவனின் மார்புக்கூட்டை திறந்து மூடியது. அந்த அறையில் நின்றபடி யன்னலூடாக வெளி உலகத்தை வேவு பார்க்கத் தொடங்கினான். இது இலை உதிர்காலம்; குடைபோன்று நிழல்பரப்பிய மரங்களெல்லாம் இலைகளை உதிர்த்து சோகமாகத் தோற்றமளித்தன. அந்த மலைசார்ந்த கிராமத்தில் குளிர்காலம் முழுவதும் இந்த மரங்களும், வீடுகளின் கூரைகளும் பனிநுரைகளை ஏந்தி நிற்பது பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

பாரிஸ் நகரத்திலிருந்து வடக்கே பல மைல் தூரத்துக் கப்பல் இந்த வியோகில் என்ற கிராமப் பாங்கான இடம் இருக்கின்றது. பார்ப்பதற்கு அழகாகவும், வசிப்பதற்கு இன்பமாகவும், இப்பிரதேசம் நல்ல வசதிகளோடு விளங்குகிறது. நகரத்தின் இயந்திர வாழ்க்கையிலிருந்து சற்று விடுபட்டமாதிரி தோன்றும் மெதுவான வாழ்க்கை நிகழ்வுகளை; இங்கு தரிசிப்பது இந்திரனுக்கு இதமாக இருந்தது.

தனது டாக்டர் தொழிலை, இங்குள்ள கூட்டுறவு மருத்துவ நிலையத்தில் ஆரம்பித்து ஒரு வருடம் ஓடிமறைந்து விட்டது அவன் ஒரு கைதேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணனாக இருந்தபடியால்; நல்ல வருவாயோடு வசதியான வாழ்க்கையையும் பெற்றிருந்தான்.

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்திரன், யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரி ஒன்றின் பழைய மாணவனாவான். தனது மருத்துவப் படிப்பை கொழும்பில் முடித்துக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட காலம் அங்கேயே பெரியாஸ்ப்பத்திரியில் தனது தொழிலை அவன் தொடர்ந்திருந்தான்.

மீண்டும் இங்கு நாட்டு நிலைமை குழப்பமடையலாம் என்று ஆருடம் பார்த்துவந்த அவனின் தந்தையான ஆசிரியர் சிவபாதம், இந்திய இராணுவம் இங்கிருந்தபோதே இந்திரனைப் பிடித்து, பயங்காட்டி, பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பிவைத்தார். இயற்கையாகவே உல்லாசப் பிரியனான இவனுக்கு, வெளி நாட்டுப் பிரவேசம் பிடித்ததாக இருந்தது. பிரான்ஸ் வருகையும் அதைத்தொடர்ந்து வியோகிலில் மருத்துவ வேலை கிடைத்ததும் அவனின் பிரியத்துக்குரிய நிகழ்வுகளாகும். எல்லாவற்றையும் விட டாக்டர் போல் பிறியிட்டின் நட்பும்.. தொடர்ந்து முன்னேற்றமடைந்த காதலும் அவளின் துணையும் இந்திரனுக்கு மிக மிகப் பிடித்தமாக இருந்தது.

ஊரிலிருந்து சிவபாதம் வாத்தியார் நாட்டுப் பிரச்சினைகள் குறித்து விரிவான கடிதங்கள் எழுதுவார். இலங்கை இராணுவத்தின் வான் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள்—பதுங்குகுழிவாழ்க்கை. மருந்துத் தட்டுப்பாடு டாக்டர்கள் தட்டுப்பாடு போன்ற விபரங்களை எழுதும் அதே கடிதத்தில், நல்ல காலமடா தம்பி நீ உங்கை போனது! நீ இஞ்சை இருந்திருந்தால்; யாழ்ப்பாணத்தில் நிலவும் டொக்டர் தட்டுப்பாடடுக்கு; யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டி வந்திருக்கும்! கொழும்பிலை உன்னை வச்சிருக்கான்கள்! வந்திருந்தால் இரவு பகல் எந்த நோமும் வேலையாய்த்தான் இருந்திருக்கும்... அத்தேடை இந்த பொம்பரடியுக்கை. என்றெல்லாம் தொடர்ந்து ''இப்பத்தான் உன்ரை கவலையில்லாமல் நிம்மதியாக இருக்கிறம்'' என்று வாத்தியாரின் கடிதம் வடிவாய் முடியும்.

ஊரிலிருந்து வரும் கடிதங்களைப்பற்றி பிறியிட்டின் ஆவலான கேள்விகள் இந்திரனைத் துளைத்தெடுக்கும். எங்கள் மண்ணின் பிரச்சினைகளைக் கேட்டறிவதில் அந்த பிரான்ஸ் பெண்மணிக்குப் பெருத்த ஆர்வம் பீறிட்டுப் பாயும். இலங்கையின் பிரச்சினைகள் சம்பந்தமாக வெளிவரும் பத்திரிகைச் செய்திகளை அவள் மிகுந்த அக்கறையோடு வாசிப்பாள். ஏற்கனவே மனித உரிமைகளைப் பேணும் நிறுவனங்களோடு அவள்வைத்திருந்த தொடர்பு, இலங்கையில் நடைபெறும் கொலைகளின் தொகை குறித்தும்: கொடுவதைகள் குறித்தும், அரச பயங்கரவாதம் குறித்தும் புள்ளி விபரங்களோடு அவளை அறிய வைத்தது. எமது இனத்தின் போராட்டத்தின் நியாயத்தன்மை குறித்தும் அரச நடவடிக்கைகளின் அநியாயத் தன்மை குறித்தும், மக்கள் அவலங்கள் பற்றியும் பிறியிட் தெளிவு பெறப் பெற்றவளாகத் தோன்றினாள்.

''டொக்டர் இந்! நீங்கள் ஒரு டொக்டர் என்ற முறையில் உங்கடை நாட்டு மக்களுக்கு செய்யவேண்டியவை நிறைய இருக்கின்றன. அதைவிட ஒரு வாலிபன் என்ற முறையில் உங்கள் மண் மீட்புப் போராட்டத்துக்கு செய்ய வேண்டியகடமை மிக்க உண்டு. இல்லையா? என்று பிறியிட் தனது பிரான்சு வாடை வீசும் ஆங்கிலத்தில் கேட்டாள்.

இந்திரனின் இதயம் துணுக்குறவில்லை. இவையெல்லாம் ஒரு பெரிய கேள்வியாகக் கூட அவன் கருதவில்லை சிரித்து பதில் கூறாது சமாளித்துக் கொண்டான்.

''நான்அறிந்த செய்திகளின்படி உங்கள் இன மக்களை உங்கள் நாட்டுப் பெரும்பான்மை அரசு மனிதாபிமானமற்ற முறையில், வான் தாக்குதலால் கொன்று போடுகின்றது. உங்கள் இனத்தின் தாயகத்தை, அரச இராணுவம் அபகரித்து வருகிறது.. பல்லாயிரக் கணக்கில் எல்லைகளில் இராணுவம் குவிக்கப் படுகிறது! உங்கள் இனத்தை அழியவிடாது காக்க, உமது இன சகோதர வாலிபர்களும், இளம் பெண்களும் ஆயுதம் ஏந்திப் போரர்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால். டொக்டர் அந்த உரிமைப் போரிலிருந்து விடுபட்டு, உல்லாசம் தேடி, நீங்களும் உங்கள் இனத்தைச் சேர்ந்த இளசுகளும் இங்கெல்லாம் ஓடிவந்துள்ளீர்கள். இது நியாயத்துக்கு அப்பாற்பட்ட செயலாகும்!..'' என்று பிறியிட் ஒரு பிரசங்கமே செய்து முடித்து நிமிர்ந்தாள்.

இந்திரன் அந்த வெள்ளைப் பெண்ணை ஊடுருவிப் பார்த்தான். உதட்டில் புன்னகையை அரும்ப விட்டவனாய் 'மிகவும் நல்லது; நீ ஒரு அரசியல்வாதியா? அல்லது டாக்டரா?' என்று கேட்டு உரக்கச் சிரித்தான்.

'அன்பே! நான் ஒரு மனிதப் பெண்' என்று மிகத்தெளிவாக கூறிவிட்டு பிறியிட் எழுந்து சென்றாள். இந்த உரையாடல் நடைபெற்று ஒரு வாரமாகியது.

இதன்பின், அவள் இவை குறித்து இந்திரனோடு கதைப்பதில்லை! ஏதோ வந்தேன். இருந்தேன் போனேன் என்ற மாதிரி அவளின் நடமாட்டம் இருக்கும் இப்பொழுது அவள் தொலைபேசி அழைப்பை ஏற்று சென்றதும், இந்திரன் சிந்தனையோடு அறையில் உலாவிவிட்டு தனது விடுதியை நோக்கி நடந்தான்.

விடுதியில், அவனின் நண்பனாகவும், சகமாணவனாகவும் இருந்த ஒருவனின் கடிதம் காத்துக்கிடந்தது. நாட்டின் நெருக்கடி குறித்தும், உணவுப் பஞ்சம் குறித்தும். இராணுவ அட்டகாசம் குறித்தும் எழுதிய அந்தக் கடிதத்தை அவன் படித்துவிட்டு மேசையில் விட்டெறிந்தான்.

கதகதப்பான அந்த அறை அவனுக்கு இதமாக இருந்தது. விஸ்கிப் போத்திலைத் திறந்தவன் முழுமையாக ஒரு கிளாசை நிறைத்து; ஒரே மூச்சில்குடித்துவிட்டு; சிகரெற்றை மூட்டி ஆழமாகப் புகையை இழுத்து வெளிவிட்டபடியே; குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். வானொலியில் இருந்து வந்த துள்ளலிசைப்பாடல் அவனுள் ஒரு பரபரப்பான உள்ளக் கிளுகிளுப்பை உண்டாக்கியபடி இருந்தது. பிறியிட்டை எண்ணி நெடுமூச்செறிந்தான்.

'அவள் ஒரு விசரி! பிரயோசனம் இல்லாதவள்' என்று அவளை எண்ணித் தன்னுள் குறைப்பட்டுக் கொண்டான். மீண்டும் மீண்டும் விஸ்கி கிளாசுகள் காலியாகவே போதையில் பொத்தென்று படுக்கையில் விழுந்தான்!

மறுநாள் காலைப்பொழுது மூடிய பனிப்புகாரோடு, தாமதமாக விடிந்தது. பிறியிட்டும், நரம்பியல் டாக்டர் றொனோல்ட் ரெயிலரும் பலமுறை கதவைத்தட்டி பிரயத்தனப்பட்டு இந்திரனை எழுப்பினார்கள். எழுந்தவன் சமநிலையின்றித் தள்ளாடினான். தனது முத்துப்பற்களை மின்னவைத்து; குழந்தைபோன்று சிரித்த பிறியிட் 'இந்! இது என்ன? இந்த கோலம் என்ன?' என்று கேட்டபடி; அவனை அன்போடு அணைத்துக் கொண்டாள்!

றொனால்ட் இயல்பாகவே நகைச் சுவைக்காரர் அந்த அறை கலகலப்பாகியது. பலதையும் பேசியவர்கள் இறுதியில் தமது திட்டத்தையும் கூறினார்கள்.

'மிஸ்டர் இந்திரன்! நாங்கள் இருவரும் நாளை உங்கள் நாட்டுக்குப் போறம்! இங்கிருந்து புறப்படும் மருத்துவர் குழுவோடு இணைந்து இலங்கையின் தமிழ்பிரதேசத்தில்... அகதி மக்களுக்கு தொண்டு புரிவதற்காகச் செல்கிறோம்' என்று டாக்டர் றொனால்ட் ரெயிலர் தனது பிரஞ் உச்சரிப்போடு கூடிய ஆங்கிலத்தால் விளக்கினார்!

அதிர்ச்சி அடைந்த இந்திரன் 'உண்மையாகவா?' என்று பிறியிட்டின் கரு நீல விழிகளைப்பார்த்தபடி கேட்டான்.

'ஓம்! நீங்கள் உங்கள் மக்களுக்குச் செய்யத்தவறிய கடமைகளை நான் செய்யப் போகிறன்' என்று கூறிவிட்டு கள்ளங்கபடமற்றுச் சிரித்துக் கொண்ட பிறியிட், மணிக்கூட்டை பார்த்தவளாய் பரபரப்படைந்தாள்! இருக்கைவிட்டு எழுந்த அந்த இரு வெள்ளை டாக்டர்களும் இந்திரனைக் கட்டித்தழுவி முத்தமிட்டு விடை பெற்றுக் கொண்டு வெளியில் நடந்தார்கள்.

— (யாவும் கற்பனை) —

## கடின உழைப்பாளிகள் சிங்கப்பூர் வாசிகளே

உலகில் கடின உழைப்பாளிகள் ஜப்பானியர் தான் என்றும். அவர்கள் அதிக நேரத்தை உழைப்பிற்காகச் செலவிடுகின்றார்கள் என்றும் இதுகாலவரையில் கருதப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது ஜப்பானியரை விட சிங்கப்பூர் வாசிகளே அதிகமான நேரம் உழைப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. ஜப்பானியர்கள் 1880 மணி நேரம் வேலை செய்கின்றனர். சிங்கப்பூர் வாசிகள் 2042 மணி நேரம் வேலை செய்கின்றார்கள்.

சுவீட்சலாந்து யூனியன் வங்கி 48 முக்கிய நகரங்களில் விலைவாசிகள், வருமானங்கள் மற்றும் வெளியீடு விபரங்களை திரட்டியது.

ஹாங்கொங் வாசிகள் சுறுசுறுப்பாக வேலை செய்வார்கள். சிங்கப்பூர் வாசிகளின் வேலை நேரம் கோலாலம்பூரிலும். மணிலாவிலும் உள்ள வேலை நேரத்தைக் காட்டிலும் குறைவு.

ஒரு வாரத்திற்கு ஐந்துமணி நேரம் வேலை என்ற அடிப்படையிலும், மேலதிக வேலை நேரம் இதில் கணக்கிடப்படவில்லையெனவும் ஆய்வுக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டது.

## கொடி நாட்டிடுவோம்

அம்மா!
பவுண் வேண்டும்
மகன் வேண்டும்
நீ பிறந்த
மண் வேண்டாமோ?

★ ★ ★

தமிழினமே!
உலகத்தின் குரல்
விடிவு தராது
இதை நீ
பலஸ்தீனத்தைப்
பார்த்துப்
புரிந்திருப்பாய்!
ஆனால்
உன் குரல்
விடிவு தரும்

★ ★ ★

தொண்டாவின்
தொண்டையால்
எம்
தொல்லை
தீராது
வஞ்சகர் வட்டம்
போடுகிறார்
வெஞ்சமர் புரிந்து
புலிக்கொடி
நாட்டிடுவோம்.

- மைந்தன்

# 'வார்சோ' கூட்டமைப்பின் சிதைவு: சிறிலங்காவிற்கு மலிவு விலை ஆயுதங்கள்

சோவியத் ரஷ்யா தலைமையிலான கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அணி உடைந்து போனதும் உலக ஆயுத விற்பனையில் ஒரு புதிய திருப்பம் உண்டாகியது. முன்னாள் வார்சோ ஒப்பந்த நாடுகளுக்கு குருட்டுஅதிர்ஷ்டம் அடித்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் 'மலிவு விலை' ஆயுதங்கள் ஆயுதச் சந்தையில் குவிந்தன. சிறிலங்கா போன்ற நாடுகள் இந்தப் புதிய சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டன.

இந்தியா தனதுபெரும்பகுதி ஆயுதத்தேவைக்குசெயலிழந்த ரஷ்யாவை நம்பியிருந்தால் கொக்கியில் மாட்டி இழுபடுவதுபோல் இழுபடத் தொடங்கியது - இந்தியாவுக்கும், இந்தியா போன்ற ஏனைய நாடுகளுக்கும் இது புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. வளை குடா யுத்தத்துக்குப் பிறகு 'டிபன்ஸ் ஏசியா' (Defe-nce As a) என்ற படைக்கலக் கண்காட்சி சிங்கப்பூரில் கடந்த மார்ச் மாதத்தில் நடைபெற்றது கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஆயுத உற்பத்தியாளர்கள் முதன்முறையாக இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டார்கள். சிறிலங்காவும் ஒரு தூதுக்குழுவை அனுப்பி பார்வையாளர் மட்டத்தில் பங்கு கொண்டது.

## மலிவு விலை ஆயுதங்கள்

நேட்டோ. வார்சோ ஒப்பந்தங்களின் அடிப்படையில் உருவான மரபுரீதியான ஐரோப்பிய படைபலம் என்ற உடன்பாட்டின்கீழ் பலகிழக்கு ஐரோப்பிய நாடுகள் தமது ஆயுதங்களில் கணிசமான பகுதியைக் களைய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1990 ஆம் ஆண்டு நவம்பர்மாதத்திலிருந்து இந்த நாடுகள் தம்வசம் வைத்திருக்கக்கூடிய டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள், தாக்குதல் உலங்கு வானூர்திகள், யுத்த விமானங்கள் ஆகியவற்றின் அளவுமட்டுப்படுத்தப்பட்டது. வேறு மாற்று வழியில்லாமல், இந்தப் புதிய உடன்பாட்டில் கைச்சாத்திட்ட நாடுகள், தமது ஆயுதங்களை மலிவு விலையில் சர்வதேசசந்தையில் விற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உலகச் சந்தையில் ஆயுத விற்பனையில் விலை வீழ்ச்சிஏற்பட்டகாலமும் இது. இப்போது சிறிலங்காவுக்கான பிரதான ஆயுத விநியோகஸ்தரான சீனாவின்ஆயுதங்களைப் போன்று மலிவும், கவர்ச்சியும், வலுவுமுள்ள ஆயுதங்களைகிழக்கு ஐரோப்பியநாடுகள் தாராளமாக மலிவு விலையில் சந்தைப்படுத்த ஆரம்பித்தன.

மரபுரீதியான ஐரோப்பிய படைபலம் என்ற உடன் படிக்கையில் உள்ள சில நெளிவுசுழிவுகளை கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. தமது கைவசமுள்ள ஆயுதங்கள் போர்க்கருவிகளில்பலவிற்பனைக்கென்று தயாரிக்கப்பட்டவை என்ற போர்வையில் தமது உபயோகத்திலிருந்த ஆயுதங்களை இந்த நாடுகள் விற்பனை செய்தன.

இந்த வகையில் மற்ற நாடுகளை விட மேலதிகமான ஆயுதக்கையிருப்புசெக்கோசெலோவாக்கியாவிடம் இருந்தது இதனால் அண்மைக் காலத்தில் இந்தநாடு T-54 T-55 ரகடாங்கிகளை மிகக்குறைவானவிலைக்குச் சிறிலங்காவுக்கு விற்றது. செக்கோசெலோவாக்கியாவின் ஆயுத உற்பத்தித் தொழில் மற்ற வார்சோ ஒப்பந்த நாடுகளை விட முன்னேற்றமானது என்பது குறிப்பிடத்தக்கது.

**- றோகன் குணசேகரா -**

முன்னாள் சோவியத் ரஷ்யாவை விட, T-55 ரகடாங்கிகளை உற்பத்தி செய்யும் இரண்டு நாடுகளில் செக்கோசெலோவாக்கியாவும்ஒன்று. இந்த நாடு. மரபுரீதியான ஐரோப்பிய படைபல உடன்படிக்கையின் கீழ்மொத்தம் 3,200டாங்கிகளில் 1,600 டாங்கிகளையும் 1,900 கவசவாகனங்களையும், 1900 பீரங்கிவாகனங்களையும் தனது பாவனையிலிருந்து குறைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

கிழக்கு ஐரோப்பாவில் உண்டான இந்தப் புதிய நெருக்கடியைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசு மிகமிகக்குறைந்த விலையில் இந்த மூலங்களிலிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகளை சிறிலங்காகைநழுவ விட்டது. இதே வேளை விற்ற போர்க்கருவிகளை சிறிலங்கா இராணுவம் பூரணமாக இயக்கப்பழகிக் கொள்ள நீண்டகாலம் பிடிக்கும் என்பதை கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நன்கறிந்திருந்தன. அதனால் உதிரிபாகங்கள் உடன் வழங்க வேண்டும் என்பதைப் பற்றி இந்த நாடுகள் மிகக்கவனமாக நடந்து கொண்டன.

செக்கோசெலோவாக்கியாவிடமிருந்து சிறிலங்கா ஆயுதக் கொள்வனவு செய்தமை சில புதிய பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளது.

வழமையான வாடிக்கையாளரிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்யாமல் புதிய மூலங்களிலிருந்து ஆயுதங்களைச் சிறிலங்கா பெற்றுள்ளது; ஆனால், இந்தப் புதிய மூலங்கள் தமது ஆயுத உற்பத்தியைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. மேலும் செக்கோசெலோவாக்கியா நாடு தனது சொந்தத் தேவைக்கு 20 வீதம் ஆயுதங்களைஉற்பத்தி செய்துள்ளது. மிகுதிஆயுதங்கள் வார்சோ ஒப்பந்த நாடுகளுக்கெனத் தயாரிக்கப்பட்டவையாகும்.

1987 இல் செக்கோசெலோவாக்கியாநாடு ஆயுதஏற்றுமதி செய்யும் நாடுகளின் வரிசையில் ஏழாவது இடத்திலிருந்தது. ஆண்டொன்றுக்கு 370 டாங்கிகளை உருவாக்கியது. ஒரு சிறிய நாடான செக்கோசெலோவாக்கியாவைபொறுத்தவரையில் இது ஒரு சாதனையாகும். தொழில் நுட்பத்துறையில் வளர்ந்த ஜேர்மனி போன்ற நாடுகளுடன் செக்கோசெலோவாக்கியாவும் சமதையாக நிற்கின்றது. ஆனால் வாடிக்கையாளர்கள், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் செக்கோசெலோவாக்கியாவுக்குஒரு பில்லியன் டாலர் கடனாகக் கொடுக்க வேண்டியுள்ளது. ஆயுத ஏற்றுமதியில் எல்லாத்துறைகளிலும செக்கோசெலோவாக்கியாவால் லாபத்தை ஈட்டிக் கொள்ள முடியவில்லை 'டாங்கிகளுக்கு எதிர்காலம் இல்லை' என்று அந்த உற்பத்தியைக் கைவிடும் படியாக அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# "முன் எச்சரிக்கை அமைப்புக்கள்" தற்காத்துக் கொள்வதற்கு அவசியம்

ஒரு இராணுவ தாக்குதலின் வெற்றி பல்வேறு காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இவற்றில் தாக்குதல் திட்டத்தின் இரகசியத் தன்மை, தாக்கும் நேரம், தாக்குதல் நடத்தும் இடம், வழி, ஆயுதபலம், ஆயுதங்களின் தன்மை என்பன முக்கிய பங்கை வகிக்கின்றன.

அதேவேளை ஒரு தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்வோர் தாக்குதலை முறியடித்து வெற்றி கொள்வதாயின், தாக்குதல் குறித்த முன் எச்சரிக்கைக்கென சில அமைப்புக்களை (Early Warning System) கொண்டிருக்கவேண்டும்.

நீண்டகால முன் எச்சரிக்கை அமைப்புகள் எதிரியின் அரசியல். இராஜதந்திர நடவடிக்கைகள் தொழில் நுட்ப பொருளாதார வசதி வாய்ப்புகள் குறித்து தேவையான தகவல்களை பெறும் அமைப்பாக இயங்கும். இது தற்காத்து கொள்பவர் தன்னை அதற்கேற்பதயார்படுத்திக்கொள்ள உதவுவதாக இருக்கும்.

குறுகிய கால எச்சரிக்கை அமைப்புகள் எதிரிப்படையினரின் நடமாட்டங்கள் குறித்த ஒரு குறுகிய காலத்தில் அவை மேற்கொள்ளக்கூடிய தாக்குதல் பற்றிய அனுமானிப்புகள் என்பவற்றை அறிந்து கொள்வதற்கு தேவையான தகவல்களை பெறும் அமைப்பாக இயங்கும். மிகக் குறுகியகால எச்சரிக்கை அமைப்புகள் தாக்குதல்கள் நடைபெறும் போது எதிரியின் அசைவுகளை நிமிடத்திற்கு நிமிடம் அறிந்து எதிர்த்தாக்குதல்களை மேற்கொள்ள தேவையான தகவல்களை பெறும் அமைப்பாக இயங்கும்.

இந்த அமைப்புகள் தமக்குத்தேவையான தகவல்களை பெறுவதற்கு பல்வேறு கருவிகளை பயன்படுத்துகின்றன.

சரித்திர காலத்தில் உயரமான காவல்கோபுரங்கள் தான் எதிரியின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்கு பயன்படுபவையாக இருந்தன. காலப்போக்கில் பலூன்கள், விமானங்கள் என இவை வளர்ச்சியடைந்தன.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இரு விழி தொலைகாட்டி (Binoculars) தொலைகாட்டி (Telescope) தொலைபேசி, வானொலித் தொலைபேசி, ஆகாய விமானங்கள் என்பன சிறந்த ஒரு இராணுவ அமைப்பு பயன்படுத்தும் எச்சரிக்கை கருவிகளாக இருந்தன.

## காவற் கோபுரங்களில் இருந்து செய்மதிவரை இப்பணியில் உள்ளன

முதலாம் உலக யுத்தத்தில் பரா ஒளிவிளக்குகள் (Search Lights) இரவில் ஆகாயவிமானங்களின் நடமாட்டம், எதிரிகளின் நடமாட்டம் என்பவற்றை அறிய பெரிதும் உதவி செயதன. அத்துடன் முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களின் போது ராடர்கருவிகள் எதிரி விமானங்களின் நடமாட்டத்தை அறிய பயன்பட்டன.

ராடர் கருவிகள் விமானங்களின் வருகை, வரும் தூரம், அவை செல்லும் வேகம் என்பவற்றை அறிய பயன்படும். இவை இரவில்கூட பல மைல் தூரங்களுக்கு அப்பால் வரும் விமானங்களைக் கண்டு பிடிக்கக்கூடியனவாய் அமைக்கப்பட்டுள்ளன. தரைப்படையினருக்கு எதிரிகளின் கப்பல்கள், விமானங்கள், ஏவுகணைகள் என்பவற்றினை முன்கூட்டியே தெரிவிக்க ராடர்கள் பயன்படுகின்றன. எனினும் இவற்றினால் சில சந்தர்ப்பங்களில் தகவல்களை தரமுடியாது. உதாரணமாக நீர்மூழ்கிகளை பற்றிய தகவல்களை இவை தரமாட்டாது. குறித்த உயரத்திற்கு கீழ் பறக்கும் விமானங்கள் பற்றிய தகவல்களையும் இவை தரமாட்டாது.

இருவிழி தொலைகாட்டிகள், தொலைகாட்டிகள் என்பன குறுகிய தூரத்தில் உள்ள நடமாட்டங்களை தெளிவாக பார்க்கஉதவும் சாதனங்களாக மிக நீண்டகாலமாக இருந்து வருகின்றன. அண்மைக் காலங்களில் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள மின் அணுக்கருவிகள் (Electronicdivices), திரைகள் (Screen) என்பன அவற்றின் செயற்பாட்டை மிகவும் திறமை உள்ளவையாக மாற்றி அமைத்துள்ளன. விமானங்களிலும் உலங்குவானூர்திகளிலும் பொருத்தப்பட்டுள்ள சத்தி வாய்ந்த இந்தக் கருவிகள் இருளிலும் தொலைவிலுள்ள பொருள்களை துல்லியமாக பார்ப்பதற்கு உதவுகின்றன.

இரவு நேரங்களில் குறித்த இடங்களை அச்சொட்டாக பார்ப்பதற்கு இந்தக்கருவிகளில் புற ஊதா (Ultraviolet), செந்நிற கீழ் (Infarred) கதிர் வில்லைகள் (Lenses) பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் செந்நிற கீழ் கதிர் வில்லைகள் மூலம் சூடான புள்ளிகளை (Hot Spots) பார்க்க முடியும் அதாவது ஒரு வாகனத்தின் இயந்திரம் விமானத்தின் இயந்திரம், ஏவுகணைகளில் எரியும் வாய்கள், துப்பாக்கிச் சன்னம் போன்ற சூடான பகுதிகளை தெளிவாக இரவு நேரங்களிலும் பார்க்க முடியும்.

கனமான உலோகங்களால் ஆக்கப்பட்ட நீர் மூழ்கிகள் இயங்கும் போது புவியின் காந்தப் புலத்தில் மற்றத்தை ஏற்படுத்தும். எனவே இந்தமாற்றத்தை உணரக்கூடிய காந்த புல அளவீட்டு கருவிகள் மூலம் (Magnometer) நீர்மூழ்கிகளின் நடமாட்டம் அறியக்கூடியதாக உள்ளது.

அதிர்வுகளைக் கண்டு பிடிக்கும் 'ஜியோபோன்ஸ்' (Geop-hones) கருவிகளைக் கொண்டு மனித நடமாட்டம், வாகன நடமாட்டம் என்பவற்றை வெகுதொலைவிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

வானொலி உணர் கருவிகள் (Rad o Sencer) எதிரியின் வானொலி தொடர்பு கருவியின் நிலைகளை அறிந்து கொள்ளலாம். இதன் மூலம் எதிரியின் அப்போதைய நிலைகளை அறிந்து கொள்ள முடிவதுடன் எதிரிகள் பரிமாறிக் கொள்ளும் தகவல்களையும் பெறமுடியும்.

நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் முன் எச்சரிக்கை நடவடிக்கைக்கு செய்மதிகள் மிகப் பெரிய பங்கை செய்து வருகின்றன. செய்மதிகளில் பொருத்தப்பட்டுள்ள புகைப்பட கருவிகள் அங்குலம் அங்குலமாக புகைப்படம் பிடிக்கும் திறமை உள்ளனவாக காணப்படுகின்றன.

அவற்றில் உள்ள புகைப் படக்கருவிகள் ஒரு சங்கிலியிலுள்ள வளையங்களைக் கூட மிகதுல்லியமாக படம்பிடிக்கும் வல்லமை உடையவை எனக்கூறப்படுகிறது.

ஒரு மனிதனின் நடமாட்டம் தொடக்கம் ஒரு பெரிய

**— வேலவன் —**

படையின் நடமாட்டம் வரை அறிந்து கொள்ளும் வகையில் முன் எச்சரிக்கை கருவிகளும் அவற்றை முறியடித்து முன் செல்லக்கூடிய வழிவகைகளும் தொடர்ந்தும் வந்து கொண்டேயிருக்கும்.

வெள்ளி மஞ்சரிக்கு ஏதாவது எழுத வேண்டும். எதை எழுதுவது? எப்படி எழுதுவது? என்று மூளையைக் குடைந்து கொண்டிருந்தேன். சிந்தனையில் பொறியாக எதுவும் பற்றிக் கொள்ளவில்லை. ஆதலால இருக்கையை விட்டெழுந்து ஜன்னலோரமாகப் போய் தெருவை எட்டிப் பார்த்து விட்டு திரும்பி வந்தேன். எனது மேசையில் ஒரு சிட்டுக்குருவி வந்து குந்திக் கொண்டிருந்தது.

என்ன விசயம்? ஏது இந்தப் பக்கம்? என்றேன் நான் "ஒண்டுமில்லை சும்மா வந்தனான்" என இழுத்துக் கொண்டு போன அது "என்ன ஏதாவது விசேடமான புதினம் ஏதும் இருக்கோ" என்று என்னிடமே திருப்பிக்கேட்டது.

"அது இருந்தால் நான் ஏன் இப்படி அலையிறன்" எனச் சலித்துக் கொண்டேன். "அப்படி அவசர அலுவல் ஒண்டும் இல்லையெண்டால் இப்படிக் கொஞ்ச நேரம் இருமன் ஏதும் கதைப்பம்" என்றது சிட்டுக்குருவி.

"ஓமோம்... என்னுடைய அலுவலகத்திற்கு வந்து இருந்து கொண்டு என்னுடைய இருக்கையையே காட்டி என்னையே இருக்கச் சொல்லுறாய் என்ன 'என்ன துணிவு உனக்கு" எனக்கூறிப் பல்லை நெருமிக்கொண்டு ஒரு கையைச் சாடையாக உயர்த்தினேன்.

கீச்சிட்டுக் கொண்டு பறந்த அது சற்றுத் தள்ளிப்போய் அமர்ந்து கொண்டு "உம்மட இதெல்லாம் என்னட்ட எடுபடாது கண்டீரோ" என்பது போலச் சவால் விட்டது.

சரி சரி நீ பெரிய ஆள் தான் ஏதோ கதைக்க வேணுமெண்டு சொன்னியே அதென்ன விஷயம் நான் பணிந்தேன் 'அப்படி வாரும் வளக்துக்கு" எனக் கூறிய சிட்டுக் குருவி 'உமக்கு பறலல் றைடிங்' எண்டால் தெரியுமோ? என்று கேட்டது. அதென்ன அது "பறலல் றைடிங்" என்றேன் நான், மக்கு... மக்கு உனக்கு இங்கிலீசும் தெரியாதோ என்று சீண்டியது குருவி. நீர் பெரிய இங்கிலீசு எல்லாம் படிச்சனீர் தான். அதென்ன எண்டு தான் கொஞ்சம் விளம்பரமாய் சொல்லுமன் என்றேன் நான் 'நான் ஒண்டும் இங்கிலீசு படிக்கேல்லை' யாழ்ப்பாணத்தில் தானே நானும் பிறந்தனான் அதால ஒண்டுரெண்டு இங்கிலீசுச் சொல்லோட கதைக்காட்டால் மரியாதையில்லைத் தானே 'ஓமோம் அது சரிதான் நீர் செல்லவந்த விசயத்தைச் சொல்லுமன்' 'பறலல்' எண்டால் சமாந்தரம்; றைடிங் எண்டால் ஓடுகிறது என விளக்கியது அது.

'ஓமோம் சமாந்தரமாய் ஓடுறது அதுக்கு இப்ப என்ன' 'அது இப்ப யாழ்ப்பாணம் முழுக்கப் பெரிய பிரச்சினை தெரியுமே' என்றது குருவி. 'அதெப்படியப்பா சமாந்தரமாய் ஓடுறது பிரச்சினையாய் இருக்கும்' என முழித்தேன் இதுக்குத்தான் சொல்லுறது கொஞ்சமெண்டாலும் விஷயம் தெரிய வேணுமெண்டு என்னை கிண்டல் பண்ணிய குருவி மேலும் பேசியது.

'இப்பல்லாம் கண்டபடி 'அக்சிடண்ட்' நடக்குது எண்டதையாவது கேள்விப்பட்டிருப்பீரோ' என்றது. 'ஓமோம்' எனத் தலையை அசைத்தேன்.

# 'பறலல் றைடிங்'

முந்தியெண்டால் எக்கச்சக்கமாய் கன வாகனம் ஓடும். கார் எண்டும், பஸ் எண்டும், வான் எண்டும், மோட்டச் சைக்கிள் எண்டும் விலத்திறதுக்கே இடமில்லாமல் றோட்டில இறங்கினால் வாகன இரைச்சல் ஒருபக்கம் ஹோர்ன் சத்தம் ஒருபக்கம் காதைப் பிய்க்கும். இப்பவல்லாம் அப்படியில்லை ஆனாலும் 'அக்சிடன்ட்' அடிக்கடி நடக்குதே ஏன்? இதை எப்பவாவது யோசிச்சுப் பாத்திரோ? என அது கேட்கவும் தான் அடடே இந்த விசயத்தைப் பற்றி இவ்வளவு நேரமும் யோசிக்காமல் இருந்திட்டமே என மனம் குறுகுறுத்தது.

'றோட்டில போற வாகனங்களை்ய விரல் விட்டு எண்ணலாம். சைக்கிளைத்தானே கனபேர் பாவிக்கினம்'. மெல்ல முணுமுணுத்தேன். 'அதுதான் பாரும் 'பறலல் றைடிங்' தெரியுமே எண்டு கேட்டனான்' என்றது குருவி.

என்னையும் அறியாமல் குருவியிடத்தில் ஒரு மதிப்பு ஏற்பட்டது போலிருந்தது.

"நீங்கள் சொல்ல நினைக்கிற விசயம் ஏதோ சாடையா விளங்கின மாதிரி கிடக்கு. இன்னும் கொஞ்சம் விளங்கிச் சொன்னால் நல்லது போலத் தெரியுது" நான் குழைந்தேன்

இப்ப வந்து எரிபொருள் தடை வாகனஓட்டம் இல்லை. பஸ் இல்லை. அதால ஒரு வேலையும் செய்ய ஏலாது எண்டு ஒருத்தரும் வீட்டுக்கை முடங்கிக் கிடக்கவும் இல்லை. அப்ப வெளிக்கிட்டுத் திரியிற ஒவ்வொருவரும் ஆகக்குறைஞ்சது ஒரு சைக்கிளிலயாவது வெளிக்கிட்டால் தான் அலுவல்களை முடிச்சுக் கொண்டு நேரத்தோட வீட்ட வரலாம். அதாவது பாரும் இப்ப றோட்டில போற ஒவ்வொருத்தரையும் ஒவ்வொரு வாகனம் எண்ட மாதிரிதான் நினைக்க வேணும் என்று நீண்ட பிரசங்கம ஒன்றை ஆரம்பித்தது குருவி. ஓமோம் என்று நானும் தலையை அசைத்தேன.

முந்தியெண்டால் ஒரு பஸ் போச்செதெண்டால் ஐம்பது அறுபது சனம் அதில போகும். இப்ப அந்த ஐம்பது அறுபது பேரும் அத்தினை சைக்கிளில தான் போக வேண்டிக்கிடக்கு.

அதால றோட்டில சைக்கிளில போகேக்கை பக்கத்தில வாற மற்றச் சைக்கிள் காரரோட கதை தொடுக்க அந்தக்கதை வளர கதைப் பிராக்கில பக்கத்தில வாறவைக்கு சைக்கிள் போய் இடிக்க ஒரு விபத்துவரும் இல்லாட்டி பின்னால வாறவர் முந்தப் பாக்கேக்கை இன்னுமொரு விதமா விபத்துவரும. இதுக்கிடையில ஒழுங்கை ஒன்றிலிருந்து டக்கெண்டு றோட்டுக்கு ஏறுற புதுப்பழக்கமாய் சைக்கிளோடுற ஒரு ஆள்வரும் இப்படியே சைக்கிளில போறவர் தான் ஒரு வாகனத்தில் போறன் எண்டதையே மறந்து போக விபத்துக்கள் எப்படி நடக்காமல் விடும்?

நீர் சொல்லுறது சரிதான் காணும் ஆனால் பக்கத்தில ஒரு தெரிஞ்ச ஆள் வரேக்கை எபபிடிக் கதைக்காமல் போறது. அப்பிடிப்போனால் அவர் ஏதும் நினைக்க மாட்டாரே' என்றேன் நான்.

ஏன் றோடடுக் கரையில நிண்டு கதைச்சுப்போட்டு பிறகு சைக்கிளை எடுத்துக் கொண்டு போகலாம் தானே அதுக்கு நேரமில்லையெண்டால் நேரம் உள்ள நேரம் வீட்டில போயிருந்து ஆறுதலாய் கதைக்கலாம். இரண்டும் இல்லையோ அக்சிடண்ட் வார்ட்டிலயும் பக்கத்துக் கட்டில்களைக் கேட்டுப் படுத்திருந்தபடி கதைக்க வேண்டி வரும் என்று கூறிவிட்டு அது சிறகடித்தது.

அது போன திக்கையே

(2ஆம்பக்கம் பார்க்க)

- சிட்டுக்குருவி -

வார்சோ

ளார்.

அரசுஆயுத உற்பத்தியைமட்டுப்படுத்தும்படி வலியுறுத்திய போதிலும செக்கோசெலோவாகியாப் பகுதியில் டாங்கி உற்பத்தி தொடர்ந்து நடைபெறுகிறது ஆயுதங்களை ஏற்றுமதி செய்துவருமானத்தைப் பெருக்குவதே இதன் அடிப்படை நோக்கம் என்று சொல்லப்படுகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஆயுதங்கள் தொடர்ந்து மலிவு விலையில் கிடைக்கும் என்ற நிலை உள்ளதால் மூன்றாம் உலக நாடுகள் சீனா போன்ற நாடுகளிலிருந்து கொள்வனவு செய்வது படிடபடியாகக் குறையலாம். தாய்லாந்து மிக அண்மையில் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்த F - 7 m சுப்பசோனிக் ஜெட் சண்டை விமானங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து அவற்றைக் கொள்வனவு செய்யாமல் கைவிட்டுள்ளது. தாய்லாந்து கைவிட்ட இந்த ரக விமானங்களை சிறிலங்கா அரசு கொள்வனவு செய்துள்ளது.

சோவியத் தயாரிபபான மிக் 27 விமானத்தின் ஒரு வடிவமைப்பான F - 7 விலையிலும், தரத்திலும் உலகில் சிறந்த விமானமாகக் கருதப்பட்டது. இந்த விமானத்தில் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் சில மேற்கு நாட்டுக் கபபனிகளின் தயாரிப்பாகும். சாதாரண சூழ்நிலையில் இந்த கம்பனிகளிலிருந்து சிறிலங்கா உதிரிப் பாகங்களை வாங்க முடியாது.

சோவியத் யூனியன் பல துண்டுகளாகப் பிரிந்ததுடன், அதை நம்பியிருந்த இந்தியா கைவிடப்பட்ட நிலையில உள்ளது இப்போது இந்தியா 3,500 நிறுவனங்களைத் தேடிப் பிடிக்க வேண்டிய நிலையில் உள்ளது. காரணம், இந்த நிறுவனங்கள் முன்னைய சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்தவையாகும். சில புதிய குடியரசுகளில் உள்ளன. இன்றும் சில நிறுவனஙகள் மூடு விழா நடத்தி விட்டன.

ஆயுத வியாபாரத்தில் சோவியத் ரஷ்யா என்ற நாடு இப்போது இலலாமல் இருப்பதல் இந்தியாவில் மற்ற ஆயுத உற்பத்தி நாடுகள் தமது ஆயுதங்களைச் சந்தைப் படுத்த முயற்சித்து வருகின்றன. போர் விமானத் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கக் கம்பனியான நோத்டிறப் தனது போர் விமானங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்யும் முயற்சியில் இப்போது ஈடுபட்டுள்ளது.

பாகிஸ்தானும் புதிய ஆயுத உற்பத்தி நாடுகளைத் தேடி வருகிறது பாகிஸ்தானின் அணுவயுத உற்பத்தி தொடர்பாக அதற்கு உதவி வழங்க அமெரிக்கா மறுத்ததும் பாகிஸ்தான் தன் வழமையான வாடிக்கை நாடான சீனாவின் பக்கம் திரும்பியுள்ளது. பூட்டான் நீங்கலாக இந்தியாவைச் சுற்றியுள்ள பற்ற நாடுகளுடன் சீனா ஆயுத வியாபாரததில் ஈடுபட்டுள்ளது கிழக்கு ஆசியாவுக்கும் சீனா ஆயுதங்களை அண்மைக் காலததில் விற்று வருகிறது. மரபு ரீதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலேயே அநேக நாடுகள் இப்போது அக்கறை காட்டி வருகின்றன. பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கை ஆயுதங்கள இப்போது மதிப்பிழந்து விட்டன.


# பதவி வெற்றிடம்

## தற்காலிக போதனாசிரியர் பதவிகள்

பனை அபிவிருத்திச் சபையில் தற்காலிகமாக கைப்பணிப் போதனாசிரியர்களாகக் கடமையாற்றுவதற்கு பின்வரும் தகைமையுடையவர்கள் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்கு உரிய சான்றிதழ்களுடன் சமுகமளிக்கலாம்.

1. கல்வித்தகைமை:
ஆகக்குறைந்தது எட்டாம் வகுப்புச் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்.

2. வயது:
40-க்கு மேற்படலாகாது.

3. அனுபவம்:
பனங் கைப்பணிப்பயிற்சி மற்றும் உற்பத்தி அனுபவம் உடையவர்களாக இருக்க வேண்டும். [பிற துறை சார்ந்த கைப்பணிப்பயிற்சி மற்றும உற்பத்தி மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும் ]

நேர்முகப் பரீட்சை

19.02.92—புதன், காலை 10.00 மணிக்கு - வடமராட்சி மற்றும் தென்மராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு.

20.02.92—வியாழன், காலை 10.00மணிக்கு - வலிகாமம் மற்றும் தீவகத்தைச் சேர்ந்தவர்களுக்கு.

(நேர்முகப் பரீட்சையின் போது செய்முறைப் பரீட்சையும் நடைபெறும்)

குறிப்பு:- 1. இந்நியமனம் ஒரு வருடத்திற்கு மட்டுமானது.
2. சம்பளம் - ரூபா 1000/- மட்டும் மாதாந்தம் வழங்கப்படும்.

பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம். [சி 3922]



உனது 5 ஆம் ஆண்டு நிறைவில்

# எமது விழிகள் சிந்தும் அஞ்சலி!



மேஜர் கேடில்ஸ்
(மகாலிங்கம் திலீபன் - கண்டாவளை)

தாய்மடியில் : 14 - 05 - 1965
தமிழீழ மண் அடியில் : 14 - 02 - 1987

ஒருபோதும் உன் நினைவு எம்மைவிட்டு அகன்றிடாது
கருவோடு பிறக்கும் எங்கள் தமிழீழத் தவ்வல்களும்
உன்பெயரில் புகழ்பாடும் குயில்க்குரலில் கவிபாடும்
உன் உடலில் செறிந்த வீரம் புலிமரபின் வீரமடா
உன்வீரம் கண்டுதானோ உன்தம்பி மேஜர் காண்டீபனும்
தன்வீரம் ஏந்தித் தமிழ் ஈழம்காணத் துடித்திறந்தான்
தனிவீரம் கொண்டவனே கேடில்ஸ் என்ற பெயரவனே
தமிழீழம் காணக்கிளர்ந் தெழுந்தவனே துடித்தவனே
கேடில்ஸ்சுடன் குகன், வாசு என்றெதிரி கேட்டதுமே
கதிகலங்கிக் குடல்நடுங்கி மனம்கதறி மறைந்திருந்து
மதியிழந்து நிலைகுலைந்து படை விலகி ஓடிச்சென்ற
கதைகளோ இங்குபல கனம்கொண்ட மனத்தவனே
மாவீரம் என்றெதிரிப் படைவியந்த உந்தனது
போர்வீரம் நாம் புகழ்ந்தோம் இன்றும்தான்
புகழுகின்றோம்!

அப்பா, அம்மா, அண்ணன் செல்வி,
அக்கா, தங்கைமார், பாமினி,
காயத்திரி, உற்றார், உறவினர், நண்பர்கள்
(சி/3917)

# சர்வதேச நிலைகுறித்த பாக். சரியான கணிப்பீடு; 4வது இந்திய - பாகிஸ்தான் போரைத் தடுத்தது

காலத்திற்குக் காலம் வெடித்துக் கிளம்பும் எரிமலை போல் மீண்டும் ஒரு முறை காஷ்மீர் பிரச்சினை வெடித்துக் கிளம்பியுள்ளது. கடந்த காலத்தைப் போலவே இம்முறையும் இந்திய-பாகிஸ்தான் யுத்தம் ஒன்றுமூளக்கூடிய, அளவிற்கு எல்லையோரத்தில் பதற்றம் நிலவுகின்ற போதிலும், போருக்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருப்பதாகத் தெரியவருகின்றது.

## காஷ்மீர் பிரச்சினை

காஷ்மீர் பிரச்சினை இன்றைய புதிய பிரச்சினை ஒன்றல்ல 1948 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் தென்னாசியாவில் இருந்து வெளியேறியதுடன் உருவாகிய பிரச்சினை இந்தியா-பாகிஸ்தான் பிரிட்டிஷாரிடம் சுதந்திரம் பெற்றபோது இவ் இரண்டிற்கும் இடையில், இருந்த காஷ்மீர் தனி சுதந்திர அரசாக இருக்க விரும்பியது. ஆனால், பாகிஸ்தானும் இந்தியாவும் அதை ஆதரிக்கவில்லை. தம்முடன் இணைத்துக் கொள்ளவே விரும்பின.

இதே வேளை காஷ்மீர் ஆட்சியாளருக்கும் - இந்து -, மக்களுக்கும் - முஸ்லிம்கள் - இடையில் இருந்த மதவேறுபாட்டை இவ்விரு நாடுகளும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. இதன் பிரகாரம் மக்களின் அழைப்பின் பெயரால் எனக் கூறிக் கொண்டு, பாகிஸ்தான் ஒரு பகுதிக்குள்ளும் மன்னரின் அழைப்பின் பேரில் எனக்கூறிக் கொண்டு இந்தியா காஷ்மீரின்மறுபகுதிக்குள்ளும் புகுந்தது. இறுதியில் காஷ்மீரின் மூன்றில் இரண்டு பகுதி- ஜம்மு - காஷ்மீர்-, இந்தியாவின் ஆதிக்கத்தினுள்ளும் மூன்றில் ஒரு பகுதி ஆசாத் காஷ்மீர்-பாகிஸ்தான் ஆதிக்கத்தின் கீழும் வந்தன.

## யுத்தங்கள்

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்தியாவும், பாகிஸ்தானும்1948, 1965ஆம் ஆண்டுகளிலும்இருதடவைகள் மோதிக் கொண்டன. மூன்றாவது மோதல் பங்களாதேஷ் தொடர்பாக 1971இல் ஏற்பட்டதாகும். அப்பொழுதும் காஷ்மீரின்எல்லையில் மோதல்கள் நடந்தன.

ஆனால் இம்மோதல்களின் பின்னும் இப்பிரச்சினை தீரவில்லை. அதேவேளை, முதலாவது போரின் பின் ஐ.நா. எடுத்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. பின்னர் 1971ஆம் ஆண்டு போரின் பின்னர் 1972ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிம்லா உடன்படிக்கையும், இப்பிரச்சினையைத் தீர்க்கவில்லை.

தற்பொழுது மீண்டும் இரு நாடுகளும் போருக்குத் தயாராக அணிவகுத்து நிற்கின்றன. 280 கி. மீற்றர் நீளமான காஷ்மீர் எல்லைப்பகுதியில் இவ்விரு நாடுகளின் சுமார் 7,00000 துருப்புக்கள் உள்ளன. ஆனால், போர் மூளும் ஓர் அபாயம் இல்லாவிடினும், எல்லையில் பதற்றம் நிலவுவதாய் எவையும், எந்நேரமும் நடக்கலாம் எனச் செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## “எல்லை தாண்டும் பேரணி”

தற்போதைய நெருக்கடி ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி அமைப்பின் தலைவர் அமானுல்லாக் கானின் அறிவிப்பைத் தொடர்ந்து ஏற்பட்டது. பெப்ரவரி 11 ஆம் திகதி குறைந்தது 50000 தொண்டர்கள், எல்லைக்கோட்டிலுள்ள சகோத்தி கிராமத்தைக் கடக்கவுள்ளதாக அறிவித்தார். இவ் அமைப்பின் ஸ்தாபகரான மக்பூல்பட் தூக்கிலிடப்பட்ட எட்டாவது ஆண்டில் - பெப்ரவரி 11 -இந்தியக்காஷ்மீரில் உள்ள தீவிரவாதிகளுடன் தங்கள் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தவே இந்த ஊர்வலத்தை தாங்கள் நடாத்தவுள்ளதாகவும்அவர் அறிவித்தார்.

ஆரம்பத்தில் இப்பேரணி தொடர்பாக பாகிஸ்தான் பெரும் அக்கறை எதையும் காட்டவில்லை. அதேவேளை சில ஊக்கமளிக்கும் அளிக்கக் கூடியதான சமிக்ஞைகளையே வெளியிட்டது. எடுத்துக் காட்டாக பாகிஸ்தான் சட்டசபையில், காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாகச் சட்டம் இயற்றப்பட்டது.

## சர்வதேச விவகாரமாக்கும் முயற்சி

காஷ்மீர் விவகாரத்தை இஸ்லாமிய நாடுகள் சில சர்வதேச விவகாரமாக்க நீண்ட காலமாகவே முயற்சித்து வந்தன. ஆனால் இந்தியா அதற்கு எதிராக அது இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினை பாகிஸ்தான் வரம்புமீறி நடந்து கொள்வதாகவே குற்றம் சாட்டி வந்தது.

இந்நிலையில், ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி ‘எல்லை தாண்டும் பேரணி’ மூலம் பிரச்சினையை உருவாக்கி காஷ்மீர் விவகாரத்தை சர்வதேசமயமாக்குவதன் மூலம் தீர்வொன்றைக் காண முற்பட்டது, இன்றுள்ள சர்வதேச சூழ்நிலையில், ஐரோப்பாவில் இடம்பெற்ற இனவிடுதலைப் போராட்டங்களுக்கு மேற்குலகில் கிடைத்த அங்கீகாரம் அதற்குத் தூண்டுதலாக அமைந்தது.

## பாகிஸ்தானின் நிலை

“ஆயிரம் ஆண்டுகளாயினும் காஷ்மீருக்காக நாம் போராடத் தயார்” என்றார் முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோ (பெனாசிரின் தந்தையார்). பாகிஸ்தான் இன்றும்இதையே வெளிப்படையாகக கூறிக் கொண்டாலும் ‘எல்லைதாண்டும் பேரணி’ விடயத்தில் ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியினருக்கு ஆதரவு அளிக்கத் தயாராக இல்லை.

பாகிஸ்தான் ஆட்சியாளரை பொறுத்து ஜம்மு - காஷ்மீர் விவகாரம்எப்பொழுதும் அவர்களின் ஆட்சி அதிகாரத்தை நிர்ணயிக்கும் ஒரு விவகாரமாகவே இருந்துவந்துள்ளது. சிறிலங்கா ஆட்சியாளர்கள், தமது ஆட்சி ஆட்டம் காணும் போது தமிழருக்கு எதிராக இனவாதத்தைக் கட்டவிழ்த்துவிட முற்படுவது போன்று பாகிஸ்தான் ஆட்சியாளர்களும் தமது நெருககடி காலத்தில் காஷ்மீர் விவகாரத்தையே தமது பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டுள்ளனர். இதற்கு பாகிஸ்தானை ஆண்ட இராணுவ ஆட்சியாளராயினும் சரிதான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியாளர்களாக இருப்பினும் சரிதான். ஆனால் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் பலரின் வீழ்ச்சிக்கும் இக் காஷ்மீர் விவகாரமே காரணமாக இருந்துள்ளது.

இதேநேரம் கடந்த காலத்தில் காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிட்ட காலத்தில் இருந்த ஆதரவான உலக சூழ்நிலைதற்பொழுது பாகிஸ்தானுக்கில்லை என்றே சொல்லவேண்டும் இந்தியாவுடன் பாகிஸ்தான் மோதிக் கொண்ட 1948, 1965, 1971 ஆம் ஆண்டுகள் உலகில் கெடுபிடிப்போர் உச்சநிலையில் இருந்தகாலகட்டமாகும். பாகிஸ்தானுக்குப் போதிய உதவிகளை வழங்க மேற்குலகம் தயாராக இருந்தது. ஆனால் இன்று அந்தச் சூழ்நிலை இல்லை. இதற்குத்தனியாக கெடுபிடியுத்தத்தின் தணிவுமட்டுமல்ல உலகில்தீவிரமாகிவரும் இஸ்லாமிய அடிப்படைவாதமும் பாகிஸ்தான் உற்பத்தி செய்துள்ள அணுகுண்டும் காரணமாகும்.

புல்லைத் தின்றாவது அணுகுண்டை உற்பத்தி செய்தே ஆவோம் என்றார் சுல்பிகார் அலிபூட்டோ, 1971 ஆம் ஆண்டு போரில் இந்தியாவிடம் தோல்வி கண்டிருந்த நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். ஆனால் தற்பொழுது பாகிஸ்தான் அணுகுண்டை உற்பத்தி செய்து முடித்துள்ள வேளையில் இந்தியாவிற்கு எதிராக ஒரு போரை நடத்தக் கூடிய சாதகமானதொரு சர்வதேச சூழ்நிலை பாகிஸ்தானுக்கு இல்லை.



‘எல்லை தாண்டும் பேரணிக்கு’ தனது புதல்வர்களை ஆசீர்வதித்து அனுப்பும் தாய். இச்சம்பவம் ஆஸாத் காஷ்மீரின் தலைநகரான முசாபராபாத்தில் நடைபெற்றது.

இதனைப் பாகிஸ்தானும் நன்குணர்ந்துள்ளதாகவேதெரிகின்றது. பேரணியின் எல்லையை கடக்க முயன்றால் துப்பாக்கி சூடு நடத்த நவாப் சரீப் உத்தரவிட்டதிலிருந்தே இதை புரிந்து கொள்ளலாம் ஊர்வலத்தைத்தடுத்து நிறுத்துவதான பாகிஸ்தான் அமைச்சரவையின் முடிவு போர்ஒன்று மூண்டுவிடக் கூடாது என்பதில் பாகிஸ்தான் கவனமாக உள்ளதையே காட்டியது. போர் ஒன்று மூளுமாயின், அதுவே பாகிஸ்தானின் அணுவாற்றலை அழித்து விடுவதற்கு இந்தியாவிற்கும் மேற்குலகத்திறகும் வழங்கிய சந்தர்ப்பமாகும் என்பதையும் பாகிஸ்தான் தெளிவாக உணர்ந்துள்ளது.

## இந்தியாவின் தந்திரோபாயம்

இந்தியாவைப் பொறுத்து காஷ்மீர் விவகாரம் எப்பொழுதும் ஒருநெருக்கடி மிக்க பிரச்சினையாகவே இருந்து வரினும் இம்முறை மிகவும் நிதானமாக சர்வதேச சூழ்நிலையை இந்தியா பயன்படுத்திக் கொண்டது என்றே கூறலாம். கடந்த காலத்தில் இலங்கை விவகாரத்தின், பின்னர் வளைகுடா நெருக்கடியின் போது விட்ட இராஜதந்திரத் தவறை இம்முறை விடாததோடு, அண்மைக்காலததில் மேற்கு நாடுகளுடன் வளர்ந்துவரும் நல்லுறவையும் இந்தியா பயன்படுத்திக்கொண்டது.

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி எல்லை தாண்டும் பேரணியை அறிவித்தவுடன் இந்தியா சர்வதேச ரீதியில் இதற்கு எதிரான நடவடிக்கையைஉடன்மேற்கொண்டது. காஷ்மீர் விவகாரத்தை உள்நாட்டுவிவகாரம் என இதுவரை திட்டவட்டமாகக் கூறி வெளியாரின் தலையீட்டை எதிர்த்துவந்த இந்தியா இம்முறை ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியின் அழைப்பைத் தொடர்ந்து ஐ நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நிரந்தர உறுப்பு நாடுகளின் கவனத்திற்கு இதைக் கொண்டு சென்றது. ஆனால், இவ்விவகாரத்தை இந் நிரந்தர உறுப்பு நாடுகள் ஐ. நா. விற்குக் கொண்டுசெல்லாமல், தத்தமது தனிப்பட்ட செல்வாக்கு மூலம் ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியின் ‘எல்லை தாண்டும் பேரணி’யைத் தடுத்து நிறுத்த பாகிஸ்தானை வற்புறுத்துமாறு பார்த்துக் கொண்டது.

அதே வேளை பாகிஸ்தானுக்கு நேரடியாக போருக்கான எச்சரிக்கைகளையும் இந்தியா விடுத்தது ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி எல்லை தாண்ட பாகிஸ்தான் அனுமதிக்குமானால், இப் பேரணியை தடுத்து நிறுத்த முயற்சிப்பதை விட பாகிஸ்தான் மீது போர் தொடுப்பதே இந்தியாவைப் பொறுத்து லாபகரமானதாகும். இதனால் இந்தியா போரைத் தவிர்க்க முடியாமல் போகும்.

அதாவது இன்று சர்வதேச ரீதியாகதேசியஇனப் போராட்டங்களுக்கு கிடைத்துவரும் அங்கீகாரங்களினால், எல்லை தாண்டும் பேரணி மீது இந்தியா துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஆயிரக்கணக்கில் மக்களைக் கொன்று பேரணியைத் தடுத்து நிறுத்துமாயின் அதன் விளைவு பாதகமானதாகவே இருக்கும். அதாவது ஜம்மு - காஷ்மீர் முன்னணி எதை விரும்பியதோ அச்சந்தர்ப்பத்தை அதற்கு வழங்கியதாகவே முடியும். இவ்வாறு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் ஈராக்கினுள் குர்திஷ் மக்களைப் பாதுகாக்க அமெரிக்க துருப்புக்கள் சென்றதுபோல், இந்தியாவிற்குள் ஐ.நா. படையினை அனுமதிக்க வேண்டிய நிலை உருவாகி விடும் என்பதையும் இந்தியா உணர்ந்துள்ளது.

இந்நிலையில் ஜம்மு - காஷ்மீர் முன்னணியின் பேரணியை பாகிஸ்தான் தடுத்து நிறுத்தாவிட்டால், பாகிஸ்தான் மீது போரைத் தொடுப்பதையே இந்தியா விரும்பியிருந்தது அதேவேளை பாகிஸ்தானிடம் உள்ள அணுகுண்டைக் காரணம் காட்டி மேற்கின் உதவியைப் பெற்றுக் கொள்வதோடு காஷ்மீர் விவகாரத்தை இந்தியாதிசைதிருப்பியும் விட்டிருக்கும்.

— ஜெயராஜ்

## கூட்டுறவு சமாசத்தின் பொதுக் கூட்டம்

‘தற்பொழுது செயலற்று இருக்கும் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சமாசத்தினை புனரமைத்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் கூட்டுறவுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகிறது. இதன் முன்னோடியாக சமாசத்தின் பொதுக் கூட்டம் ஒன்று நாளை காலை 10. 30 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் கூட்டப்பட உள்ளது.

இதற்கான அறிவித்தல்கள் ஏற்கனவே அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அறிவித்தல் கிடைக்கப் பெறாத அங்கத்துவ சங்கங்கள் தங்கள் பணிப்பாளர் சபையில் அல்லது நிர்வாக சபையில் ஒருவரை பொதுச்சபைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்து தலைவர், செயலாளரால் வழங்கப்பட்ட அதிகாரக் கடிதத்துடன் மேற்படி கூட்டத்துக்கு அனுப்பி வைக்கும்படி யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

## மேஜர் ஜீவா பாலர் பாடசாலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

நாகர் கோவிலில் மேஜர் ஜீவா பாலர்பாடசாலைஒன்று இன்று திறந்துவைக்கப்படவுள்ளது திருக்கோணமலை இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களில் ஒன்றான நாகர் கோவில் வெப் கேணல் ஜோய் வீடமைப்புத் திட்ட முகாமில் உள்ள பாலர் வகுப்பு மாணவர்களுக்காகவே இப் பாலர் பாடசாலை திறந்துவைக்கப்படவுள்ளது.

இப்பாலர்பாடசாலைமாணவர்களுக்கான சத்துணவையும் ஆசிரியர்களுக்கான ஊதியத்தையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கவுள்ளது தளபாட உபகரணங்களைச் சமூக மேம்பாட்டுத்திட்ட திருமலை மாவட்டப் பிரிவு வழங்கியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் சமூக மேம்பாட்டுத்திட்டம் திருகோணமலை மாவட்டப் பிரிவின் கண்காணிப்பில் உள்ள மேற்படி வீடமைப்புத் திட்டத்தினுள் கப்டன் அன்ரன் வாசிகசாலையும் அமைந்துள்ளது.

இவர்களின் கண்காணிப்பின் கீழ் உள்ள செம்பியன்பற்று லெப். கேணல் டேவிட், மருதங்கேணி லெப். கேணல் பொன்னம்மான், கைதடி லெப். கேணல்சரா, அரியாலை லெப். செல்லக்கிளி அம்மான், நவாலி லெப். பரமதேவா, தும்பளை 2 ஆம் லெப் மணாளன், தயான், லெப் பூபதி ஆகிய முகாம்களில் வாசிகசாலையும், பாலர் பாடசாலையும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கலை நிகழ்ச்சி இடம் மாற்றம்

இன்று நெல்லியடி மகாத்மா திரையரங்கில் நடைபெற விருந்த கலை நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் நெல்லியடி பஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளதாக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் யாழ். மாவட்டத்தினர் தெரிவித்துள்ளார்கள்.

இந்த கலை நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சி பிரிவின் 'செவ்வானம்' இசைக்குழுவின் இசை நிகழ்ச்சியும் வலகாமம் பிரிவு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் உருவாக்கப்பட்ட 'சுதந்திரப் போர் வெல்லும்' நாடகமும் நடைபெறவுள்ளது.

# இனப்பிரச்சினைத் தீர்விற்கு பயனுள்ள நடவடிக்கைதேவை

## பொதுச் சேவைகள்சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் நிகழ்ச்சிப் பட்டியலில் முதலிடம் கொடுத்து அதனைத் தீர்ப்பதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இலங்கை பொதுச்சேவைகள் சங்கம் கேட்டுள்ளது.

93 கிளைச் சங்கங்களை உள்ளடக்கிய இச்சங்கம் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலே இச் சங்கத்தின் தலைவர் ஜயரத்தினா மலியகொட இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான கலந்துரை புதிய நெருக்கடியொன்று ஆரம்பமாவதால் நின்றுவிடக்கூடாது என்றும், அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை பொருளாதார நிலைமைகள், ஸ்திரமற்ற அரசியல் நிலைமை ஆகியன பற்றி ஆராய்ந்த பின்னரே இத்தீர்மானங்கள் இச் சங்கத்தல் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்

ஜாதிகசிந்தனையை (தேசிய சிந்தனை), ஹெல உறுமய (சிங்கள பாரம்பரியம்), பூமி புத்ரர் (மண்ணின் மைந்தர்கள்) மற்றும் ஏனைய சகல தீவிரவாதக் கருத்துகளும் பொதுமக்களைத் தவறாக இட்டுச் செல்லவும், இலங்கை சமுதாயத்தில் குறிப்பாக உழைக்கும் வெகுஜன மக்கள் மத்தியில் ஐக்கியத்தைக்குலைக்கவும் வழி அமைக்கும் இது இயல்பு நிலைமை, சமாதானம், அமைதி ஆகியன மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கவே உதவும்.

தேசிய இனப்பிரச்சினையின் நிலைமையை மேலும் மோசமாக்கும் சகல முயற்சிகளையும் நிறுத்த சகல அரசியல் கட்சிகளும், குழுக்களும் சமய ஸ்தாபனங்களும் மக்கள் அமைப்புகளும் அரசும் நிறுத்த வேண்டும் என்றும் அந்தகோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த அகதி ஒருவரின் உலர் உணவு விநியோகத்திற்கான அனுமதி அட்டை 'இ' ஆஸ்பத்திரிவீதியில்கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாதாந்த உதவிப்பணம் பெறுவதற்கான அட்டையும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஈழநாதம் காரியாலயத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (75)

# மகளிர் தினத்தை ஒட்டி விசேட நிகழ்ச்சிகள்

(வடமராட்சி கிழக்கு)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, வடமராட்சியில் கிராமம் கிராமமாக விசேட நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

வடமராட்சி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னனியின் அனுசரணையுடன் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

உரைகள், நாடகங்கள் உட்பட பல கலைநிகழ்ச்சிகள் தினமும் பல இடங்களில் நடைபெறுகின்றன. (36)

# நடந்ததை மறந்துவிட அமைச்சர் கோருகிறார்

நடந்ததை மறந்துவிடுங்கள். தமிழர்கள் ஒருபோதும் ஒதுக்கப்படமாட்டார்கள் என்றுஅமைச்சர்தயாரத்தினா கூறினார். புனர்வாழ்வு, புனரமைப்பு ராஜாங்க அமைச்சர் பி தயாரத்னா அண்மையில் திருக்கோயில் பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்ட போது அகதிகள் மத்தியில் மேலும்பேசுகையில், இந்த நாட்டில் சமூகங்கள் ஐக்கியமாக வாழ வேண்டும் இல்லாவிட்டால் இந்த நாட்டில் வளம் இருக்கமாட்டாது என்பதை உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

# குழந்தைகள் மூளை வளர்ச்சிக்கு உபஉணவு ஊக்குவிப்பு திட்டம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெறும் போர்க்காலச் சூழ்நிலையினால் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு யுனிசெப் உதவியுடன் உபஉணவு ஊக்குவிப்பு திட்டம் ஒன்றை யாழ். மாநகராட்சிமன்றம் செய்யவுள்ளது.

மேலும் இத்திட்டம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் தெரிவித்தார். (75)

# இன்ரர் போலின் உதவியை இந்தியா நாடியுள்ளது

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாகதேடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் ஆகியோரைக் கைது செய்ய இந்திய அரசு இன்ரர் போல் எனப்படும் சர்வதேசப் பொலிசாரின் உதவியை நாடியிருப்பதாக தெரியவருகிறது.

இது தொடர்பாக நேற்று கொழும்பிலிருந்து வெளிவரும் லங்காதீபசிங்கள இதழ்மேலும் செய்தி தருகையில் கொழும்பு வந்துள்ள இந்திய விசேட காவல்துறையின் பிரதி இன்ஸ்பெக்டர் ஜெனரலும் விசேட துப்பறியும் நிபுணருமான அகமட்கான் தலைமையிலான குழுவொன்று இலங்கைப்பாதுகாப்பு படையின்துணையோடு தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் ஆகியோர் தங்கி இருக்கக்கூடியஇடங்கள் பற்றிப் புலன் விசாரணையில் ஈடுபட்டுவருவதாகத்தெரிவித்தது.

# காய்ச்சலினால் சிறுமி உயிரிழப்பு

திடீரென ஏற்பட்ட காய்ச்சல் சிறுமி ஒருத்தியின் உயிரைக் குடித்தது யாழ். பிரப்பங்குளம் வீதியில் வசிக்கும் புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பஞ்சலிங்கம் வத்சலா (வயது-9) என்ற சிறுமியே இவ்வாறு காய்ச்சலினால் உயிரிழந்தவர்ஆவார்.

இச்சிறுமி காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதை அடுத்து சிகிச்சைக்காகவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் மூன்று நாட்களுக்குள் அக்கொடிய காய்ச்சல் சிறுமியின் உயிரைக் குடித்துள்ளது. (22)

## ஜோர்ஜியாவில் விரட்டப்பட்ட

# இலங்கை மாணவருக்கு மொஸ்கோவில் இடம்

(கொழும்பு)

ஜோர்ஜியாவில் இருந்த பதினேழு இலங்கை மாணவ, மாணவிகளுக்கு ரஷ்யஅரசாங்கம் தங்குமிட வசதிகளை செய்து கொடுத்துள்ளது என இலங்கையிலுள்ள ரஷ்ய சம்மேளனத் தூதுவர் யுயிர் வினோகிரடோவ் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து சோவியத்யூனியனின் புலமைப் பரிசில் பெற்று முப்பத்தைந்து இலங்கையர்கள் ஜோர்ஜியா மாநிலத்தில்கல்விபயின்றனர். கடந்த ஒகஸ்ட் மாதம் இடம் பெற்ற அரசியல் மாற்றம்காரணமாக சோவியத்யூனியனின் கீழிருந்த பதினைந்து மாநிலங்கள் தனித்தனியாக சுதந்திரத்துடன் இயங்கத் தொடங்கின இச் சந்தர்ப்பத்தில் மேற்படி முப்பத்தைந்து மாணவ, மாணவிகளும் நிர்க்கதியாகினர். இவர்களதுஉடைமைகள்இனந்தெரியாதோரால் கொள்ளையடிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ராஜீவ் கொலை வழக்கு:

# சமரச முயற்சிகளை பாதிக்க மாட்டாது

**- ரணில்**

(கொழும்பு)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரனையும் ஓர் எதிரியாக சென்னை நீதிமன்றம் அறிவித்திருப்பது இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சிறிலங்காஅரசு மேற்கொண்டு வரும் சமரச முயற்சிகளை எவ்வகையிலும் பாதிக்காது.

இவ்வாறு தொழில்துறை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

# ஓய்வூதியகட்டுநிதி வரவில்லை

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியர்களுக்கான பெப்ரவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ் செயலகத்திற்கு கிடைத்துள்ளன. ஆயினும் இம் மாதத்திற்கான கட்டுநிதி இதுவரை வந்து சேராததினால் ஒய்வூதியம் வழங்கமுடியாத நிலை உள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ச)

## எல்லை

களை தான் இழந்துவிட்டதாகவும் இன்னும் பலரை இழக்க தான் விரும்பவில்லை என்றும் ஜே. கே. எல். எவ். தலைவர் அமானுல்லா கான் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பிக்கப்பட்டு மூன்றாம் நாளானநேற்றுஇந்த அறிவித்தல் வெளியிடபபட்டுள்ளது

# பீகாரில் 37 பேர் கொலை

(டில்லி)

பீகார் மாநிலத்தில் காயா மாவட்டம் பரா என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு ஆயுதந் தாங்கிய கோஷ்டி ஒன்று நடத்திய தாக்குதலில் 37 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தார்கள், 15 வீடுகளை தீயிட்டுக் கொளுத்தியதாக பீகார் மாநில உள்துறை அதிகாரி தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தியவர்கள் கிராமத்திலிருந்த முக்கியஸ்தர்களை இழுத்துச் சென்று ஓர் கால்வாயருகில் நிறுத்தி சுட்டுக் கொன்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## கலந்துரையாடல்

யுனிசெப உசவியுடன் 1992 ஆம் ஆண்டு யாழ் மாநகராட்சி மன்றப் பிரதேசத்தில் நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் வேலைத் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் யாழ் மாநகராட்சி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 3 15 மணியளவில் நடைபெற உள்ளது.

யாழ் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள சன சமூக நிலையங்களின் தலைவர் அல்லது செயலாளர் இக் கலந்துரையாடலில் பங்கு பற்றுமாறு அழைக்கப்படுகிறார்கள்.

## யாழ்

ளேடு மட்டுமன்றி பொது மக்களோடும் இராணுவத்தினர் மோத வேண்டிய நிலை ஏற்படும்.

மேலும் யாழ்ப்பாணக்குடாநாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதல் அயர்லாந்தின் பெல்பாஸ்ட் போன்ற நிலையையே இங்கும் தோற்றுவிக்குப் ஏற்கனவே திருக்கோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் நடந்துவரும் சம்பவங்கள் இத்தகைய பெல்பாஸ்ட் நிலையை எடுத்துக் காட்டுவதாகவே உள்ளன.

எனவேதான் உண்மையான பௌத்த தர்மத்தை நீங்கள் கடைப்பிடிப்பவராக இருந்தால் தமிழர்களுக்கு தேவையான எல்லாவற்றையும் கொடுக்கச் சித்தமாக இருக்க வேண்டுமெனக் கோருகின்றேன் எனவும் குறிப்பிட்டு உள்ளார்.

## களம்

மக்களின் உள்ளங்களையும், உணர்வுகளையும் அறிய முற்படவேண்டும் என்ற வரிசையில் பௌத்த குருமாரும் வரலாம். அவர்களை வரவேற்கவும். அவர்களுடன் பேசவும் நாம் தயாராக இருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தென்னிலங்கையிலுள்ள சில சக்திகள் மீண்டும் இனவாதக் குரலை ஓங்கி ஒலிக்கத் தலைப்பட்டுள்ளன. இதனால் நிலைமை மேலும் மோசமடையுமே தவிர பிரச்சினை தீரப்போவதில்லை. இதனைத் தென்னிலங்கை இனவாதிகள் உணர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ராஜீவ்காந்தி கொலைக் குற்றச்சாட்டு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரையும், பொட்டம்மானையும் சரணடையக் கோரும் நீதிமன்ற உத்தரவு போன்ற இந்திய அரசின் புதிய இராஜதந்திர நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இனி ஏற்படுத்தப்போவதுமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## திருமலையில்

பிரயோகத்தில் பட்டக்குட்டி சிவகுமார் (உப்போடை), பாக்கியன் யோகன், அருள் (முகத்துவாரம்), செல்லையா சித்திரவேல் (சீனன்குடா)ஆகியோர் கொல்லப்பட்டனர். பட்டக்குட்டி சிவகுமாரின் தாயார் பாக்கியம், சகோதரி ஜெயமலர் (வயது 9) ஆகியோர் கால்களை இழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

மூதூர் 64 ஆம் கட்டையிலிருந்து பெரியபாலம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தமிழர்கள் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் சின்னத்தம்பி சிவபால் [கூனித்தீவு] கொல்லப்பட்டார்.

மகிந்தபுரவில் கடந்த புதனன்று இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடாத்திய தாக்குதலில் இரண்டு தமிழர்கள் பலியாகியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## வவுனியாத்

வரிடம் அனுப்பிவைக்குமாறு கூறுகின்றனராம்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு ஊடாக வவுனியா கிராமப்புறங்களுச்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்களும் இச் சோதனையிலிருந்து தப்புவதில்லை என்று தபாலக ஊழியர் ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

தற்போது வவுனியா மாவட்டத்தில் விநியோகம் செய்யப்படும்கடிதங்களில்பல, இராணுவத்தினரால் சோதனை செய்யப்பட்டவையாகவே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஸ்பத்திரி

(3) பார்வையிடும் நேரங்களில் பாஸில் இருப்பவர்கள் மட்டும் தொடர்ந்து அனுமதிக்கப்படுவார்

(4) வெளிநோயாளர் பிரிவினுள் நின்று உரையாடுவது தேவையற்றவிதத்தில் நடமாடுதல் போன்றவற்றை தவிர்க்கவும். அண்மையில் நடந்த சம்பவத்தை தொடர்ந்தே மேற்படி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (75)

## கம்பன்

ஞர்கள், முதுபெரும் எழுத்தாளர்கள் ஆகியோர் அடங்கிய ஊர்வலம் நான்கு மணிக்கு ஆரம்பமாகி நல்லை ஆதீனத்தை வந்தடைந்ததும் நாலு முப்பது மணியளவில் கம்பன் விழாஆரம்பமாகுமென அதன் அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

## அமானுல்லாகான்

தால்கைது செய்யப்பட்ட இவர் நேற்று விடுதலைசெய்யப்பட்டார் என்று பாகிஸ்தான் அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது